Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 361

ஞாயிற்றுக்கிழமை
23 நவம்பர் 2025

கார்த்திகை 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60



யாழில்

டிசெம்பர் முதல்வாரம் டெங்குக் கட்டுப்பாடு

» 03

## இறந்தோரை அஞ்சலிக்க எந்தத் தடையும் இல்லை

அமைச்சர் பிமல் தெரிவிப்பு



கிளிநொச்சி, நவம்பர் 23

போரில் உயிரிழந்த உறவுகளுக்கு மக்கள் அஞ்சலி செலுத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். 15

## யாழ்.குருநகர் கடற்பரப்பில் இளைஞரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் குருநகர் கடற்பரப்பில் இளைஞர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் இளவாலை பகுதியைச் சேர்ந்த ஜோர்ஜ் ஸ்டீபன் மதிவாணன் (வயது -18) என்ற இளைஞரே இவ்வாறு சடல 15

## கடும் எதிர்ப்புக்கு மத்தியில் யாழ். உள்ளக அரங்குக்கு இன்று அடிக்கல் நடுகை!

அமைச்சர் பிமல் வருகை

யாழ்ப்பாணம், நவ. 23

சூழலியல் ஆர்வலர்களின் எதிர்ப்புக்கு மத்தியில், யாழ்ப்பாணம் உள்ளக விளையாட்டு அரங்கிற்கு இன்று அடிக்கல் நடப்படவுள்ளது. 15

## யாழ்ப்பாணம் உள்ளக அரங்கால் பூங்கா முற்றாக அழியும் அபாயம்



பொ.ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில் அமைக்கப்படவுள்ள உள்ளக விளையாட்டரங்கால் அந்தப் பகுதியில் உள்ள நூற்றாண்டுகால மரங்கள் முற்றாக அழிக்கப்படும் ஆபத்து அதிகரித்துள்ளது இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள் ளார். பழைய பூங்காவில் புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பதற்கான அடிக்கல் இன்று நடப்படவுள்ளது. இவ்வாறான நிலையிலேயே, அந்தத் திட்டத்தை ஐங்கரநேசன் கண்டித்துள்ளார். 15

## மயக்கமருந்து நிபுணர் இன்றி மன்னாரில் பெரும் நெருக்கடி!

வடக்கு சுகாதார அமைச்சுக்குக் கடிதம்

மன்னார், நவ. 23

மன்னார் மாவட்ட மருத்துவமனை மயக்கமருந்து நிபுணர்கள் இல்லாமல் இயங்கி வருகின்றது என்று வடமாகாண சுகாதார அமைச்சின் செயலருக்குக் கடிதம் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மன்னார் நகரமுதல் 15

## உடைமையில் ஹெரோய்ன்: ஐவருக்கு மரணதண்டனை

கொழும்பு, நவ. 23

152 கிலோ 341 கிராம் ஹெரோய்னை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஐந்து நபர்களுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித் 15

## மோ.சைக்கிள் விபத்து மாணவனுக்கு காயம்

உயர்தரப் பரீட்சைக்கு சென்று திரும்பியவர்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியில் மோட்டார் சைக்கிளும்ஓட்டோவும்மோதி நேற்று ஏற்பட்ட விபத்தில் மாணவன் ஒருவன் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். குறித்த மாணவன் செலுத்திச் சென்ற மோட்டார்சைக்கிள் ஓட்டோவொன்றுடன் மோதி விபத்துக்கு உள்ளானதாக விபத்தை நேரில் பார்த்தவர்கள் பொலிஸாரிடம் தெரிவித் 15



## இலங்கையர் தினத்துக்கு அனைவரும் ஒன்றிணைக!

தமிழ், முஸ்லிம் தலைவர்களுடன் ஜனாதிபதி நேற்று கலந்துரையாடல்

15

முச்சந்தி முராரி



" பழசெண்டாலே அதெல்லாம் குப்பை எண்டு நினைக்கிறவை இருக்குமட்டும் எப்பிடி நாங்கள் உருப்படுவம்?"

# சஞ்சீவி



## போதைப்பொருள் ஒழிப்பில் தீவிரம் காட்டியது நான்தான்

மைத்திரி பெருமிதம்

கொழும்பு, நவ. 23

நாட்டில் போதைப்பொருள் கலாசாரத்தை முற்றாக ஒழிக்கும் திட்டத்தில் தீவிரமாகச் செயற்பட்ட முதலாவது ஜனாதிபதி நான்தான்- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரி 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 22.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4263 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 12 23 60 76 |
| விசேட எழுத்து | I |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 22.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1330 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 25 41 51 54 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 22.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0289 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 1 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 22.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2369 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 04 13 22 49 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 22.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6021 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 5 1 3 3 7 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 22.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2051 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 04 24 49 57 |
| விசேட எழுத்து | I |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 22.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0596 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 3 3 7 9 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 22.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0137 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 24 34 48 |

# இனவாதத்துக்குத் தூபமிடவே திருமலையில் புத்தர் சிலை

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

**யாழ்ப்பாணம்,நவ.23**

**சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையின் அதிகார அரசியல் கலாசாரத்தில் ஏற்பட்ட எதிர்பாராத மாற்றத்தை மீளவும் பழைய இனவாத மையத்துக்கு இழுத்துச்செல்லும் முயற்சியாகவே திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டதைப் பார்க்கமுடிகின்றது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை மாவட்டத்தில் கடந்தவாரம் அவசியமற்ற விதத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தமிழ் - சிங்கள மக்களுக்கிடையிலான புரிந்துணர்விலும், நல்லிணக்கத்திலும் கணிசமானளவு மறைத்தாக்கத்தையும் செலுத்தியுள்ளன.

அதேவேளை ஆளும் தரப்பு மீது சிறுபான்மைச் சமூகத்தினர் கொண்டிருந்த நேர்த்தன்மையான எதிர்பார்ப்புகளையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

இவ்வாறான நிலைமைகள் அமைதியான இலங்கைத் தீவைக் கட்டியெழுப்பவும், ஜனநாயகத் தன்மைமிக்க அரசியல் கலாசாரத்தை வலுவூட்டவும் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு பலவீனத்தைக் கொடுக்கக்கூடியன.

உயர்ந்த மெய்ஞானத்தையும், ஆன்ம ஈடேற்ற வழியையும் உலகுக்குப்போதித்த ஞானியாக மதிக்கப்படும் புத்தர் பெருமானை ஆக்கிரமிப்பின் கருவியாகவும் அடாவடித்தனத்துக்கு துணைசெய்யும் குறியீடாகவும் பாவிப்பது அவரால் போதிக்கப்பட்ட பௌத்த தர்மத்துக்குச் செய்யும் மிகப்பெரும் அவமரியாதையாகும். இந்த நாட்டின் மீது இறையாண்மை கொண்ட அடித்தட்டு மக்கள் அன்றாட வாழ்வை நகர்த்துவதற்குக் கூட நெருக்கடிகளைச் சந்திக்கும் தேசமாக மாற்றப்பட்டமைக்கு பௌத்த தர்மத்தின் பெயரால் செய்யப்பட்ட ஆக்கிரமிப்புகளும், இனவழிப்புகளும் சூறையாடல்களுமே காரணம் என்பதை இன்றளவும் உணரா திருப்பது வேதனைக்குரியதே.

இன்று ஆட்சியிலுள்ள அரசாங்கம் பௌத்தத்துக்கு முக்கியத்துவம் அளித்து சிங்களவர்களைத் திருப்திப்படுத்தும் சிறுமைத்தனமான அரசியல் கலாசாரத்துக்குள் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவேண்டும்.- என்றுள்ளது. (க-இ)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.11.2025 | சனிக்கிழமை | D | 1 0 3 3 3 0 | 0729 |

## Super Ball DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 22.11.2025 | சனிக்கிழமை | 2995 | C | 20 29 57 80 |

## சனிதா DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 2.11.2025 | சனிக்கிழமை | X | 02 17 61 77 | 5156 |

## SASIRI DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 22.11.2025 | சனிக்கிழமை | 0825 | 22 41 42 |

## லக்ன ராசி DLB

| திகதி | தினம் | மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 22.11.2025 | சனிக்கிழமை | | 10 13 22 45 | 4707 |

## KAPRUKA DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 22.11.2025 | சனிக்கிழமை | E | 04 | 07 08 41 47 | 2171 |

## அத கோடிபதி DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 22.11.2025 | சனிக்கிழமை | R | 15 34 40 56 | 2821 |

## JAYODA DLB


| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| | | | | |

# பிரதேசசபை தவிசாளர் சடலமாக மீட்பு

திருகோணமலை, நவ.23

திருகோணமலை கோமரங்கடவல பிரதேசசபை தவிசாளர் பிரகாத் தர்மசேன (வயது32) நேற்று வயலில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை வீட்டில் இருந்து தனது வயலுக்கு காவலுக்குச் சென்றவர் வீடு திரும்பாத நிலையில், அவர் அங்கு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். இவர் கோமரங்கடவல பிரதேசசபையில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு அதிக வாக்குகளை பெற்றிருந்தார்.(எ-இ)





# அரசாங்கத்துக்கு எதிரான அடுத்த கூட்டம் விரைவில்

கொழும்பு,நவ.23

அரசாங்கத்துக்கு எதிராகக் கூட்டு எதிரணியால் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ள அடுத்த கூட்டத்திலாவது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ அழைப்பு விடுத்துள்ளார்.

நுகேகொடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

76 வருடங்கள் நாட்டை நாம் நாசமாக்கவில்லை. 1965 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. உதயமான பின்னரே, நாடு வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. அனைத்துத் திட்டங்களையும் அவர்கள் குழப்பினார்கள். எனவே, 76 வருடங்களான சாபம் நாம் அல்லர். ஜே.வி.பி.யினர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். மஹிந்த ராஜபக்ச போரை முடித்த தலைவர். பொருளாதார நெருக்கடியைச் சமாளித்த தலைவர் ரணில். - என்றார். (க-44)

# கோப்பாய் துயிலுமில்லத்தில் மாவீரர் நினைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்ப்பாணம் கோப்பாய் துயிலுமில்லத்தின் மாவீரர் வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கோப்பாய் துயிலுமில்லம் காணப்பட்ட பகுதியில் இராணுவ முகாம் அமைந்துள்ள நிலையில் அதன் வாயிலில் சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டது.

பிரதான ஈகைச்சுடரினை இரண்டு மாவீரர்களின் தாயார் ஏற்றி வைத்தார். பின்னர் மாவீரர்களின் பெயர்கள் அடங்கிய நினைவுப் பெயர்ப்பலகைகள் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன. (க-66)

# மதுரை மீனாட்சியை தரிசித்தார் ரணில்!

சென்னை,நவ.23

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தரிசனம் மேற்கொண்டுள்ளார். தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது மனைவியும் இந்தியா சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில்

# டிசெம்பர் முதல் வாரத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு வாரம்

**யாழ்ப்பாணம்,நவ.23**

**யாழ்.மாவட்டத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் டிசெம்பர் முதலாம் திகதி முதல் 6ஆம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.**

இந்தக் காலப் பகுதியில் பிரதேச செயலாளர்கள் தமது பிரிவுக்குரிய தவிசாளர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளையும் ஒருங்கிணைத்துக் கிராமங்களைக் கொத்தணி ரீதியாகப் பிரித்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களையும் ஈடுபடுத்தி வீடுகள், பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் களத்தரிசிப்புக்களை மேற்கொள்ளுமாறு யாழ் .மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது டெங்கு நோய்க்கட்டுப்பாடு ஓரளவு சீராகவுள்ளது.

எனினும், இந்த வருடத்தில் இற்றை வரை 1027 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ச்சியான டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுக் கண்காணிப்பு அவசியம். அரச திணைக்களங்களால் திண்மக் கழிவுகளைத் தரம் பிரித்து வழங்கப்படுவது குறித்து உறுதிப்படுத்தல்கள் அவசியம்.

பாடசாலையில் மாணவர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் வழங்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ச-66)



கொடிகாமம்

## மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் வார நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், நவ.23

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்ல முன்றலில் மாவீரர் வார ஆரம்ப நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தி சுடரேற்றி மலர் தூவி அஞ்சலிக்கப்பட்டது.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்களான செ. மயூரன், சி.பிரபாகரன் மற்றும் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-28)

## ரணில்- சஜித் சங்கமம் பிரிவினையைத் தடுக்கும்

ஹரின் சுட்டிக்காட்டு

கொழும்பு,நவ.23

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் கட்டாயம் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு இல்லையேல் எமது ஆதரவாளர்கள் வேறு அரசியல் முகாமை நோக்கி நகரக்கூடும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்து கூட்டங்களை நடத்த வேண்டும். அதற்குரிய இடைவெளியை வழங்கினால் எமது ஆதரவாளர்கள் மாற்று அரசியல் முகாமை நோக்கி நகரக்கூடும். எனவே, அடுத்த கூட்டத்திலாவது இரு தரப்புகளும் இணையவேண்டும்- என்றார். (ச-44)



திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு சம்பூர் கலாசார மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. சம்பூர் ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்,குடும்ப உறுப்பினர்கள்,அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-50)

## நயினாதீவுப் படகுச்சேவைக்கு உரிய பொறிமுறை அவசியம்

*வேலணைப் பிரதேசசபையில் வலியுறுத்து*


யாழ்ப்பாணம்,நவ.23

நயினாதீவுக்கான சேவையில் ஈடுபடும் படகுகளின் தரம், கட்டண அறவீடு, வரி அறவீடு, சங்கம் மற்றும் படகுகளின் பதிவுகள் என்பவற்றை ஆராய்ந்து ஒரு முறையான பொறிமுறையை உருவாக்கி, மக்களுக்குப் பாதுகாப்பான போக்குவரத்துச் சேவைகளை முன்னெடுக்கவேண்டும் என்று வேலணைப் பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டத்தில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

வேலணைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றபோது உறுப்பினர் கார்த்தீபன் இதனை முன்மொழிந்தார்.

குறிகாட்டுவான் - நயினாதீவு இடையேயான கடற்போக்குவரத்துச் சேவைகளைச் சீரமைப்பது அவசியமாகும். நாளாந்தம் ஆயிரக்கணக்கான பயணிகளின் போக்குவரத்து மார்க்கமாக இருக்கும் இந்த படகுச் சேவைகளை தனியார் முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக 45 க்கும் மேற்பட்ட படகுகள் சேவைகளை முன்னெடுக்கின்றன. ஆனால் குறித்த சேவைகளை முன்னெடுக்கும் படகுகள் சங்கம் சட்டபூர்வமான ஒன்றல்ல. அத்துடன் படகுகளும் சேவைக்கு உகந்த தரத்தில் இருப்பதில்லை. அவை தரச் சான்றிதழ் இல்லாது சேவைகளை முன்னெடுக்கின்றன என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றன. அத்துடன் பயணிகளிடம் அறவிடப்படும் கட்டணம், படகுச் சேவைக்கான வரி உள்ளிட்டவையும் முறையாக அறவிடப்படுவதில்லை. எனவே இது தொடர்பில் ஆராய்ந்து முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க-27)



## சேவையில் பழைய பேருந்துகள் பயணிகள் இடைநடுவில் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், நவ.23

வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு, பழைய பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதால், இடைநடுவில் பேருந்துகள் பழுதடைந்து நிற்கும் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் பயணிகள் நீண்டநேரம் காத்திருப்பின் பின்னர் உரிய இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இருந்து நேற்று அதிகாலை 6 மணிக்கு பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட அரச பேருந்து, நாகர்கோவில் பகுதியில் பழுதடைந்து நின்றது. குறித்த பேருந்தில் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தொழிற்றுறைகளுக்குச் செல்வோர் உரிய நேரத்துக்குச் செல்ல முடியாமல் இடை நடுவில் அந்தரித்தனர். வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் பயன்பாட்டில் இருக்கும் அரச பேருந்துகள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இவ்வாறு பழுதடைந்து நிற்பதால், புதிய பேருந்துகளைச் சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் பலமுறை கோரிக்கை விடுத்தும் உரியவர்கள் செவிசாய்க்கவில்லை. எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடமராட்சிக் கிழக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-27)

## ஊர்காவற்றுறையில் நடமாடும் சேவை



யாழ்ப்பாணம்,நவ.23

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நடமாடும் சேவையில் 862 பேர் பங்கேற்று பல்வேறு சேவைகளைப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கருணநாதன் இளங்குமரனின் பிரதிநிதி லக்ஷ்மன், யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி வனஜா செல்வரட்ணம், உதவி மாவட்டச்செயலர் உ.தர்சினி, அதிகாரிகள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (க-66,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 12 . 1945



மறைவு
22 . 11 . 2025

## சுப்பிரமணியம் சாரதாம்பாள்
### (நயினாதீவு)

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான சுப்பிரமணியம் சாரதாம்பாள் அவர்கள் நேற்று (22.11.2025) சனிக்கிழமை காலையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் - கண்மணி தம்பதியரின் ஏகபுதல்வியும், காலஞ்சென்ற நடராசன் மற்றும் தனபாலசுந்தரம், காலஞ்சென்ற கனகசுந்தரம் மற்றும் மாசிலாமணி, பரமேஸ்வரன், புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கிருஸ்ணவேணி, மற்றும் பத்மாசனி, சிவராசினி, புவனேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மலர்விழி (கனடா), கயல்விழி (கனடா), அருள்விழி (சுவிஸ்), நீலவண்ணன் (கனடா), காலஞ்சென்ற மணிவண்ணன், மற்றும் கமலவண்ணன் (கனடா), மணிவிழி (கனடா), கலைவண்ணன் (கனடா), சதீசன் (லண்டன்), நிஷாந்தன் (லண்டன்), தாரணி (லண்டன்), சிறாணி, பாலசங்கர், ரகுகரன் (கனடா), கபிலா (கனடா) ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது அரசடி வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகன கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 657 4850 - பரமேஸ்வரன்
077 616 9666 - தனபாலசுந்தரம்
077 446 0155 - மாசிலாமணி
001 647 768 2714 - புவனேஸ்வரன் - கனடா
83/11, தஞ்சி லேன், அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/30745) J-1

# வடக்கு சுதேச வைத்தியர்கள் பற்றாக்குறைக்கு உடன் தீர்வு

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,நவ.23

வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறையை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் தாதிய உத்தியோகத்தர்கள், சுகா தாரத் தொழிலாளர்கள், சுகாதார உதவியாளர் கள், சுகாதார தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட ஊழியர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று சுகாதாரம் மற்றும் வெகு சன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் நாடா ளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கை யில் அவர் இதனைத் தெரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெடுங்காலமாக இந்தத் துறைக்கு ஆள்சேர்ப்பு இடம்பெறவில்லை. மருந்துக் கலவையாளர்கள், சமையலாளர் மற்றும் உதவியாளர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறை உள்ளது. குறித்த ஆளணி வெற்றிடங்களை நிரப்புவது தொடர் பான விடயங்களை நாம் சுகாதார அமைச்சின் செய லாளர் தலைமையிலான குழுவிடம் முன்வைத் துள்ளோம். மிக விரைவாக இந்த ஆட்சேர்ப்பு களை மேற்கொள்வோம்-என்றார். (சு-246)

# மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 11 . 1941



மறைவு
21 . 11 . 2025

## இராசையா சற்குணராஜா
### (முன்னாள் தேசிய சேமிப்பு வங்கி சிரேஷ்ட முகாமையாளர்)

காரைநகர், தங்கோடையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சற்குணராசா (முன்னாள் தேசிய சேமிப்பு வங்கி சிரேஷ்ட முகாமையாளர்) அவர்கள் கடந்த (21.11.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்வமணி தம்பதியரின் அன்பு மருமகனும், வசந்தகுமாரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தவமணிதேவி (இந்திராணி) அவர்களின் அன்புச் சகோதரரும், சுதாகரன் (இந்தியா), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிச்சந்திரன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும், சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மைத்துனரும், அபிஷனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2025) திங்கட்கிழமை காலை 08:00 மணியளவில் அரசடிகாடு கதிர்காமசுவாமி கோவிலடி, காரைநகரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


தகவல்: குடும்பத்தினர்
க.சுந்தரலிங்கம் - 077 500 8734
077 977 6411

தங்கோடை,
காரைநகர்.

(CR/46561) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 08 . 1949



மறைவு
21 . 11 . 2025

## திரு. காங்கேசு ஸ்ரீபாலச்சந்திரன்
### (ஓய்வுநிலை காங்கேசன் சீமேந்து கூட்டுத்தாபன ஊழியர்)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார் கோயிலடி, கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட திரு. காங்கேசு ஸ்ரீபாலச்சந்திரன் அவர்கள் கடந்த (21.11.2025) வெள்ளிக்கிழமை காலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு - இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தேவசேனா அவர்களின் அன்புக் கணவரும், றோகன் (உரிமையாளர் - Nada Techno, Wellawatta), காலஞ்சென்ற நிந்துஜா மற்றும் அருணன் (MENS Collection - சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்யைாரும், யாழினியின் (உரிமையாளர் - Nagarathnam Yoga Center, Wellawatta) அன்பு மாமனாரும், தார்மிகனின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் புஸ்பாதேவி (நங்கி), கீர்த்திராணி (பபி), இந்திரகுமாரன், ஜெயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கேசவரத்தினம், நித்தியானந்தன், ரஞ்சினி, கனகலிங்கம், காலஞ்சென்றவர்களான கெங்காதேவி - நடேசன், மற்றும் பாலச்சந்திரன் - றோகினி, சாவித்திரிதேவி - குகனேசன், பிறேமாதேவி - ராயூ, பானுமதி - இரவீந்திரன், குமரன் - லகுமதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 773 0645
077 048 8832

பிள்ளையார் கோயிலடி,
கொல்லங்கலட்டி.

(CR/46562) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்திய மீனவர் அத்துமீறல் தட்டிக்கேட்க எவருமில்லை!

*மன்னார் சமூக அபிவிருத்தி மைய இணைப்பாளர் சுட்டிக்காட்டு*

**மன்னார், நவ.23**

**அயல்நாட்டு மீனவர்களின் தொடர் அத்துமீறலால் வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறியுள்ளது. இவர்களது அத்துமீறல் நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்த எவருக்கும் திராணியில்லை என்று மன்னார் சமூக அபிவிருத்திக்கான மையத்தின் இணைப்பாளர் ஜான்சன் பிரிடாரோ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் வடக்கு மீனவர்களின் துன்பியல் வாழ்வு தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

அயல்நாட்டு மீனவர்கள் தொடர்ச்சியாக எமது கடல் வளத்தை அழித்து வருகின்றனர். இவர்களது அத்துமீறல் நடவடிக்கைகளைத் தட்டிக்கேட்க எவரும் இல்லை. எமது மீனவர்கள் இலங்கைக் கடல் சட்ட வரையறைக்குள் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், எமது கடல் எல்லைகளுக்குள் அயல் நாட்டு மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்துச் செல்கின்றனர். இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. எனவே அயல் நாட்டு மீனவர்களின் அத்துமீறல்களைத் தடுப்பதற்கு காத்திர நடவடிக்கை எடுக்கப்பட்டாலே வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்யமுடியும்- என்றார். (க-27)

## நுகேகொட கூட்டம் மொட்டுக்கே முன்னுரிமை

கொழும்பு,நவ.23

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராகக் கூட்டு எதிரணி என்ற அறிவிப்புடன் நுகேகொடவில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது என்று பலராலும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பிவிதுரு ஹெலஉறுமய, புதிய ஜனநாயக முன்னணி உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவே முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

நிமல் சிறிபால டி சில்வா, ஜீ.எல். பீரிஸ் போன்ற சிரேஷ்ட தலைவர்கள் பங்கேற்றிருந்தாலும் அவர்களுக்கு உரையாற்ற வாய்ப்புக் கிட்டவில்லை. மழை காரணமாகவே நேரத்தைக் கருத்திற்கொண்டு முக்கியமான பிரமுகர்களுக்கு உரை வழங்கப்படவில்லை என ஏற்பாட்டாளர்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)

## மணல் அகழ்வு இருவர் கைது!

யாழ்ப்பாணம்,நவ.23

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று, தாளையடிப் பகுதியில் நீண்டகாலமாக சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் டிப்பர் ஒன்றுடன் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மருதங்கேணி பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி அத்துக்கல தலைமையில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சுற்றிவளைப்பில் அவர்கள் சிக்கினர்.

கைப்பற்றப்பட்ட டிப்பரையும், கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களையும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதற்கு மருதங்கேணிப் பொலிஸார் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். (ச-27)






ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளம் தேங்குவதைத் தடுக்கும் முகமாக வெள்ளம் வடிந்து ஓடும் வகையில் நடவடிக்கைகள் ஊர்காவற்றுறைப்பிரதேசசபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (F-41-9)


## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.23

தமிழர்தேச விடுதலைக்காகத் தம் இன்னுயிர்களை உவந்தளித்த மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன.

காலை 9.30 மணியளவில் சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்திலும், முற்பகல்11 மணியளவில் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும், பிற்பகல் 2.30 மணியளவில் பருத்தித்துறை சூரிய மஹால் மண்டபத்திலும், மாலை5 மணியளவில் வட்டுக்கோட்டையிலும் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன . (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்துவிடுவீர்கள். கணவன் –மனைவி கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். உறவினர்கள்மூலம் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படாது.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குத் தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரவகையில் வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டு.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள்மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை நல்லபடி முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் செலவுகளிலும் சற்றுக் கவனம் செலுத்துவது நல்லது. சிலருக்குப் பிள்ளைகள்மூலம் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும். கணவன் – மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.





## மானிப்பாயில் மாவீரர்களுக்கு உணர்வெழுச்சியுடன் அஞ்சலி

யாழ்ப்பாணம்,நவ.23

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் ஏற்பாட்டில், மானிப்பாய் நகர் முழுவதும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு, உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபை அலுவலகம் முன்பாக விசேடமாக அமைக்கப்பட்ட வளாகத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுவருகின்றது. மாவீரர் வார ஆரம்ப அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து, ஏற்றிய தீபங்களுடன் சபைக்குப் பிரசன்னமான உறுப்பினர்கள் அங்கும் அஞ்சலி செலுத்தினர். சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 28 உறுப்பினர்களில் ஈ.பி.டி.பி. சார்பில் இருவரும், தேசிய மக்கள் சக்தி சார்பில் ஒருவரும் அஞ்சலி நிகழ்வில் பங்கேற்கவில்லை. (சு-27)

## தெல்லிப்பழைச் சந்தியில் மாவீரர் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், நவ.23

மாவீரர் வாரத்தின் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்.வலிகாமம் வடக்குத் தெல்லிப்பழைச் சந்திக்கு அருகிலுள்ள பேருந்து நிலையத்துக்கு முன்பாகப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

தாயக விடுதலைக்காக மூன்று மாவீரர்களை உவந்தளித்த மாவீரர்களின் தந்தையான மகேந்திரம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மண்ணுக்காக உயிர் நீத்த வீரமறவர்களான மாவீரர்களின் நினைவாக மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ச-41-66)

## முதியோர் கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.23

தென்மராட்சிப் பிரதேச 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர் கொடுப்பனவு பெறுவோருக்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு வழங்கல் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதியோர் கொடுப்பனவை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அஞ்சல் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-9)





## வலி. மேற்குப் பிரதேசசபையில் மாவீரர்களுக்கு நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,நவ.23

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் மாவீரர்களுக்கும், இறுதிப் போரில் உயிர்நீத்த உறவுகளுக்கும் ஈகைச் சுடர் ஏற்றி, மௌன வணக்கத்துடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் தேசிய மக்கள் சக்தியின் மூன்று உறுப்பினர்களும் இணைந்திருந்தனர். எனினும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவர் அஞ்சலி நிகழ்வில் பங்கெடுக்கவில்லை. (சு-27)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், நவ.23

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தியிலுள்ள அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் ஆலய மண்டபத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பரிபாலனசபைத் தலைவர் பொ.கேசவராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச-41)

## தெல்லிப்பழையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு இன்று

யாழ்ப்பாணம்,நவ.23

மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு வலிகாமம் வடக்கில் தெல்லிப்பழைச் சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் நினைவாலயத்தில் எதிர்வரும் புதன்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# ஏக்கிய இராச்சிய 2.0...!

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக, கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருக்கின்றார் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலரும் ஜனாதிபதி சட்டத் தரணியுமான சுமந்திரன். 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம் பெற்ற புதிய அரசியலமைப்பு முயற்சிகளை முழுமைப் படுத்தவேண்டும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார். 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒட்டுமொத்த நாடாளுமன்றமும் அரசியலமைப்பு உருவாக்கப் பேரவையாக மாற்றப்பட்டது. அதற்கான வழிநடத்தல் குழுவில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரனும், ஜனாதிபதி அநுரவும் (நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது) அங்கத்துவம் வகித்திருந்தனர். ஆனால், அன்றைய காலத்தில் அரசியலமைப்பு உருவாக்கத்தை வைத்து உருப்பெற்ற சர்ச்சைகள் கொஞ்சநஞ்சம் அல்ல.

'ஏக்கிய இராச்சிய' அரசியலமைப்பு என அறியப் பட்ட அது, தமிழர்களின் வேணவாவை -அரசியல் அபிலாஷைகளை ஒற்றையாட்சித் தத்துவத்துக்குள் முடக்கப் போகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினார். ஆனால், பிரிக்கப் படமுடியாத - சமஷ்டிக்கு நிகரான அதிகாரப் பகிர்வே இதன்மூலம் நடைமுறையாகும் என்று சுமந்திரன் சாதித் தார். இந்த விடயத்தில் சுமந்திரன் ஒருமுனையிலும், கஜேந்திரகுமார் உள்ளிட்ட தரப்பினர் மறுமுனையிலும் நின்று கயிறிழுத்தல் காட்டினார்களே தவிர, அந்தத் தீர்வுத் திட்டத்தின் உண்மையான அம்சங்கள் தொடர் பில் இன்றளவும் சரியானதொரு தெளிவு தமிழர்களிடம் இல்லை. இப்போதும்கூட - சில வாரங்களுக்கு முன்னர் 'ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பை மீண்டும் கொண்டுவருவதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட் டுள்ளன. இது தொடர்பில் அரசாங்கம் சர்வதேசத் திடமும் அறிவித்துள்ளது' என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியிருந்தார். அதனை எண் பிப்பதுபோல சுமந்திரனும் 'புதிய அரசியலமைப் புக்கு புதிய எத்தனங்கள் அவசியமில்லை. ஏற்கனவே நாம் முன்னர் தயாரித்த அரசியலமைப்பை பூர்த்தி செய்தால் அதனை விரைவாக நிறைவேற்றலாம்' என்று கூறியிருக்கிறார்.

ஆக, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்னெடுக்கப் பட்ட ஒரு பிரதானமான நகர்வு தொடர்பில், ஓரணி யில் நின்று தெளிவுபடுத்தவும் அல்லது அதைக் கை விடவும் தமிழ்த் தேசியக் கட்சிகளால் முடியவில்லை. ஒன்றல்ல, இரண்டல்ல கடந்த பத்து வருடங்களாக இது சாத்திய மாகவில்லை. 'ஏக்கிய இராச்சிய' அரசியமைப்பு செயலுறுப் பெறுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ள இந்தக்காலத்தில், அது தொடர்பான தெளிவுபடுத்தலை அல்லது விவாதத்தை வெளிப்படையாக நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வர வேண்டும். தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் சிவில் அமைப்புகள் இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளை பொதுவான விவாதங்களுக்காக ஒன்றிணைத் துள்ளன. எனவே, 'ஏக்கிய இராச்சிய' என்னும் இடியப்பச் சிக்கல் தொடர்பில் வெளிப்படையான விவாதமொன்றை நடத்துவதற் கான முன்னெடுப்பை அவை மேற்கொள்ள வேண் டும். அரசியலமைப்பு உருவாக்கம், இனப்பிரச்சினைக் குத் தேவையான இறைமையுள்ள தீர்வு ஆகிய முன்னெடுப் புகளை மேற்கொள்வதற்காகவே மக்கள் தமது பிரதிநிதி களைத் தெரிவுசெய்கின்றனர். அதுதான் பிரதிநிதித்துவ ஜனநாயகம். இவ்வாறிருக்கையில், தம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்ற தெளிதலை மக்களுக்கு வழங்காமல் இருப்பது அழகுமல்ல -முறையுமல்ல.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

மரநடுகை மாதம் (நவம்பர்)

அறச்செயல்களின் மொத்த வடிவம் மரமே. கைமாறு கருதாது. நமக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் வாரி வழங்குபவை மரங்கள் தான். தன்னை வெட்டுபவனுக்கும் கூட நிழலாய் இருந்து அவனைக் காப்பதும் மரங்களே!

–கௌதம புத்தர்–




## 550 மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை!



**கொழும்பு, நவ.23**
**வரலாற்றில் முதல் முறையாக சுமார் 350 மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 200 மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சுமார் 350 மருந்து வகைகளுக் கான கட்டுப்பாட்டு விலையை நிர்ண யிக்க சுகாதார அமைச்சு நடவ டிக்கை எடுத்துள்ளது. இந்த நாட்டு மருந்து விநியோகத் துறையில் இது புதிய புரட்சியாகும். எதிர்வரும் நாள் களில் மேலும் 200 மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்ப தற்கான நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. தனியார் மருந்தகங்களில் மருந்து வகைகளை அதிக விலைக்கு விற்பனைசெய்கின்றனர். ஆகையால் மருந்துகளுக்கான விலையை நிர்ண யிப்பதற் கான புதிய வர்த்தமானி அறி விப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது - என் றார். (ச-இ)

## மின்னல் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.23
நாட்டில் பல மாவட்டங் களுக்கு பலத்த மின்னல் தாக்கங்கள் குறித்து வளி மண்டலவியல் திணைக் களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் சேதங்களைக் குறைத்துக்கொள்ளபோது மான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
மின்னல் ஏற்படும்போது, வீட்டிற்குள் இருக்குமாறும், மரங்களுக்கு அடியில் இருக்கவேண்டாம் என்றும் பொதுமக்களுக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



## தரம் 6 க்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

கொழும்பு,நவ.23
2025ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 2026ஆம் ஆண்டுக்கான 6 ஆம் வகுப்பு மாணவர் சேர்க்கைக் கான வெட்டுப்புள்ளி களை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
அமைச்சின் http:// www.moe.gov.lk, https://g6application. moe.gov.lk என்ற வலைத்தளத்தில் வெளி யிடப்பட்ட வெட்டுப்புள் ளிகளைப் பார்க்கலாம் என அறிவிக்கப்பட்டுள் ளது. (ச-இ)

## பொலிஸ் அதிகாரிகள் பணி இடமாற்றம்!

கொழும்பு,நவ.23
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட் பட 25 பொலிஸ் அதிகாரிகள் பணி இடமாற் றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனும தியுடன் பொலிஸ்மா அதிபரால் இந்தப் பணி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
இந்த இடமாற்றம் நேற்றுமுன்தினம் வெள் ளிக்கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


## போதைப்பொருள் விற்பனை இருவர் கைது

கொழும்பு, நவ.23
போதைப்பொருள் விற்பனையில் ஈடு பட்ட பெண் உட்பட இருவர் மாத் தளைப் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ள னர். மாத்தளை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மாத்தளை கிரிமெட் டியாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் மாத்தளை கிரிமெட்டியாவ பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய ஆணும் 46 வயது டைய பெண்ணும் ஆவர். சந்தேக நபர்களிடமிருந்து 5 கிராம் 567 மில் லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொ ருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை – கார்த்திகை 5
24.11.2025
சுபநேரம் : 06.10 - 07.40
ராகுகாலம் : 10.40 - 12.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணங்களின் அதிகாரங்களை பறிப்பது ஜனநாயக விரோதம்!



சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.23**
**வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஆளுநர்களிடம் கையளித்து விட்டு இருப்பது என்பது ஜனநாயக விரோதச்செயல். தமிழ் மக்களுக்குக் கிடைத்த உரிமைகளை அரசாங்கம் மறுதலிக்கிறது என்பதே இதன் பொருள் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமிக்கப்போவதாக சொல்கிறார்கள். எல்லை நிர்ணயத்துக்கு இன்னும் மூன்று நான்கு வருடங்கள் ஆகலாம். பழைய முறையில் தேர்தல் நடத்தவும் அரசாங்கம் தயார் இல்லை. ஆனால் அவ்வாறு தயாராக இருந்தால் அடுத்த வருடமே தேர்தலை நடத்தமுடியும். மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டது தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே. குறைந்தபட்சம் வடக்கு -கிழக்கிலாவது மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஆளுநர்களிடம் கையளித்து விட்டு இருப்பது என்பது ஜனநாயக விரோதச் செயல்.


தமிழ் மக்களுக்குக் கிடைத்த உரிமைகளை இதனூடாக அரசாங்கம் மறுதலிக்கிறது- என்றார். (ச-இ)

## கசிப்புக் காய்ச்சியவர் உடுவிலில்கைது!

யாழ்ப்பாணம், நவ.23
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் கசிப்புக்காய்ச்சும் இடமொன்று பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை சுற்றி வளைக்கப்பட்டு முற்றுகையிடப்பட்டது.

இதன்போது கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்படும் கோடா கைப்பற்றப்பட்டது. சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ச-41-27)



## மாவீரர்களுக்கு கொழும்பில் ரவிகரன் எம்.பி. அஞ்சலி

கொழும்பு, நவ.23
மாவீரர் நினைவேந்தல் வாரம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மாவீரர் வாரத்தின் முதல்நாளில் கொழும்பில் மாவீரர்களுக்குத் தனது அஞ்சலிகளைச் செலுத்தினார். மாவீரர் துயிலுமில்லத்தைத் தாங்கிய உருவப்படத்துக்கு சுடரோற்றி, மலர்தூவி, மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலிகளைச் செலுத்தினார். வரவு - செலவுத் திட்டத்துக்கான நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்காக தற்போது கொழும்பில் அவர் தங்கியுள்ள நிலையில், அங்கு மாவீரர் நாள் நினைவேந்தலை மேற்கொண்டிருந்தார். (எ-இ)

சுகாதார விதிமீறல்

## விற்பனை நிலையத்துக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம்



யாழ்ப்பாணம், நவ.23
வண்டுகளுடான அரிசியைக் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்த குற்றச்சாட்டில் நெல்லியடி நகரப்பகுதியிலுள்ள மொத்த விற்பனை நிலையமொன்றுக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி நகரில் நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போது குறித்த விற்பனை நிலையத்தில் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படாமை கண்டறியப்பட்டது.

அதற்கமைய குறித்த வர்த்தக நிலையத்துக்கு எதிராக இரு குற்றச்சாட்டுகள் தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இரு குற்றங்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ச-41-9)

## ஆற்றுக்குள் பாய்ந்தது கட்டுப்பாட்டை இழந்த கார்

வவுனியா, நவ.23
வவுனியா நொச்சிமோட்டை ஆற்றுக்குள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து காரொன்று வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த காரே நொச்சிமோட்டை பாலத்தில் சென்றுகொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் பாய்ந்தது. விபத்தில் கார்ச்சாரதி சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

அங்கு பொருத்தப்பட்டுள்ள நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குழாயில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-110)





## வலி.வடக்கு சபையில் மாவீரருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ.23
வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு அண்மையில் நடைபெற்ற நிலையில், அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

சபா மண்டபம் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு மண்ணுக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

சுடர் ஏற்றப்பட்டு, ஒருநிமிட அகவணக்கம் செலுத்தப்பட்ட பின்னர் மாவீரர்கள் நினைவாகக் கார்த்திகைப் பூவைத் தாங்கிய உருவப்படத்துக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கட்சி பேதங்கள் கடந்து வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் அனைத்து உறுப்பினர்களும் மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். (எ-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் ஆய்வகம்

## பதவி: இளநிலை ஆய்வாளர்

மெய்ப்பொருள் ஆய்வகம், வடக்கு, கிழக்கு இலங்கையிலிருந்து முழுநேர இளநிலை ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பங்களை வரவேற்கிறது.

### முக்கிய பொறுப்புகள்

- மூத்த ஆய்வாளரின் மேற்பார்வையின் கீழ் ஆய்வுத் திட்டங்கள் மற்றும் மாதிரித் திட்ட வடிவமைப்புகளில் பங்கேற்பது.
- கருத்தியல் வடிவமைப்பு, பகுப்பாய்வு அமைப்புகள் மற்றும் ஆவணப் பணிகளில் உதவுவது.
- தமிழ்/ஆங்கிலம் இருமொழிகளிலும் ஆய்வுக் குறிப்புகளைத் தயாரித்தல் மற்றும் ஒப்புவித்தல்.

### தகைமைகள்


- வலுவான கலந்துரையாடல் மற்றும் எழுத்துத் திறன்.
- ஏதாவது துறையில் பல்கலைப் பட்டம் பெற்றவர் அல்லது இறுதியாண்டு மாணவர். (கணித துறை, பொருளாதார துறை, அல்லது விஞ்ஞான துறை விரும்பத்தக்கது)
- தாயகத்தின் நீண்டகால அறிவுசார பணிக்குத் தன்னார்வ அர்ப்பணிப்பு.

**சம்பள அளவுகோல்**
(GE-2, 2025): ரூ. 66,880 + ஆண்டு உயர்வு மற்றும் செயல்திறன் ஊக்கத் தொகை. தகுதியான விண்ணப்பதாரியினால் பதவி நிரப்பப்படும் வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**
உங்கள் சுய விபரங்களை (CV) மற்றும் குறுகிய திறன் சார்ந்த குறிப்பை கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:
meipporul.aaivaham@gmail.com
முழு வேலை விவரக்குறிப்பு (Full Job Specification):
https://aaivaham.blogspot.com/2025/11/JuniorResearcher.html

**மெய்ப்பொருள் ஆய்வகம் பற்றி:**
உலகின் பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப, கலாச்சார மற்றும் பிற துறைகளில் நிகழும் மாற்றங்களைப் புரிந்து, அவற்றின் அடிப்படை மற்றும் உண்மையான காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்வதே தன்னார்வ தொண்டு நிறுவனமான மெய்ப்பொருள் ஆய்வகத்தின் முதன்மை நோக்கமாகும்.
இத்தகைய ஆய்வுகளை தாயகத்தின் பார்வையில் புரிந்துகொள்ளும் திறனை வளர்க்கும் இளைய தலைமுறையினரை கண்டறிந்து, அவர்களின் மூலமாக இதை முன்னெடுத்துச் செல்லுவது இந்த அமைப்பின் முக்கியக் குறிக்கோளாகும்.


# நீங்கா நினைவுகளில் முப்பது ஆண்டுகள்



அமரர்
கனகசபை சண்முகசுந்தரம் (சோமு)
(ஸ்தாபகர், சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)
தோற்றம்:- 03.11.1941



அமரர்
சண்முகசுந்தரம் சிவரூபன் (டியூக்கோ)
(மாணவன் - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)
தோற்றம்:- 18.08.1983

மறைவு
23.11.1995

கப்பலாய் எங்களை கரைசேர்த்த உங்களை
இப்பவும் நினைக்கின்றோம் இதயத்தால் மறவாது
தப்பாது ஆண்டுகள் முப்பது முடிந்தாலும்
எப்போதும் நீங்கள் எம்மனதில் இருப்பீர்கள்.

துர்க்கா இல்லம்,
இல.29, ஒட்டுமடம் வீதி,
ஒட்டுமடம், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/59963) J-1


# மாடி வீடு உடன் விற்பனைக்கு

பம்பலப்பிட்டி ரிஜ்வே பிளேஸ் (Ridgeway Place) இல்
2 அறைகள், 2 குளியல் அறைகளுடனான
**Apartment விற்பனைக்கு உண்டு.**

பம்பலப்பிட்டி பிள்ளையார் கோயில், பம்பலப்பிட்டி பிளட்ஸ் (Flats), பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, பம்பலப்பட்டி இந்து மகளிர் கல்லூரி, சென். பீறறர்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கு அருகாமையில் அனைத்து வசதிகளுடன் ரம்மியமான சூழலில் இந்த வீடு அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு : 076 7604884

## VACANCIES

வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல
Construction Compny இற்கு
Quantity surveyor QS மற்றும் Mason Bass,
Electrician, Pulumber, Welding,
Carpenter வேலை தெரிந்தவர் உடனடியாக தேவை.
தொடர்பு: 0777700582

## Apartment for Sale

வெள்ளவத்தையில் காலி வீதிக்கு அருகாமையில்
1250 SQFT - 3 Bedroom, 2 Bathroom(1st Floor)
1650 SQFT - 4 Bedroom, 4 Bathroom Duplex
(7th Floor).
Brand New Luxury Apartment
உடனடி விற்பனைக்கு உண்டு. No Brokers
தொடர்பு: 077 522 2613

## வீடு விற்பனைக்கு

3 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையில் 1 1/2 பரப்புக் காணி, கிணறு, வீட்டுடன் சிவன் கோவிலிலிருந்து 300m தூரத்தில் Tower க்கு அருகில் Owner வெளிநாடு செல்ல இருப்பதால் உடனடி விற்பனைக்கு உண்டு.
(CR/46551) J-1
077 651 1746, 077 615 8906

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், சண்டிலிப்பாய் மற்றும் உடுவில் பிரதேசங்களுக்கு மத்தியில், அழகிய இயற்கை சூழலில் நல்ல குடிநீருடனான கட்டுக்கிணற்றுடன் 9 பரப்பு (90பேர்ச்) காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 070 1988


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பலகாரம் செய்யத் தெரிந்தவர் தேவை**

கொழும்பில் உள்ள யாழ்ப்பாண உணவுப்பொருள் தயாரிக்கும் இடத்திற்கு பயித்தம் உருண்டை சீனி அரியதரம், வடை, சீனி முறுக்கு தயாரிக்க தெரிந்த பெண்கள் தொடர்பு கொள்ளவும்.
தங்குமிடம் தரப்படும். அனுபவம் அவசியம்.
சம்பளம் 120000/- தொடங்கி 150000/- வரை.
உங்கள் பெயர் முகவரியை SMS செய்யவும்.

**075 800 5057**

(CS/59935) J-1

## 35ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கூட்டுறவாளர் அமரர்
**சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள்
(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்,
(ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாசம்)

தோற்றம் 06.10.1927 — மறைவு 23.11.1990



சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் **அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள் மறைந்து இன்று 35 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

(எ.43737) (N-1)

## 35ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கூட்டுறவாளர் அமரர்
**சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள்
(முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்,
ஸ்தாபகர், முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட சி.க.கூ.சங்க சமாசம்)

தோற்றம் 06.10.1927 — மறைவு 23.11.1990



சங்கங்களின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கூட்டுறவாளர் **அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்** அவர்கள் மறைந்து இன்று 35 ஆவது ஆண்டில் நினைவு கூருகின்றோம்.

**யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கோப்பாய் பிராந்தியம்**

CR 41084

**IMMEDIATE JOBS IN DUBAI**
**WELL REPUTED CONTRACTION COMPANY**
Interview with foreign principals shortly

| SL NO | JOB TITLE | COUNT | Salary (AED) |
|---|---|---|---|
| 1. | Mason (Tile, Plaster) | 50 | 1300 |
| 2. | Shuttering Carpenter | 50 | 1300 |
| 3. | Finishing Carpenter | 50 | 1300 |
| 4. | Gypsum Technician | 50 | 1300 |
| 5. | Scaffolder | 11 | 1300 |
| 6. | Steel Fixer | 50 | 1300 |
| 7. | Plumber - Construction) | 50 | 1300 |
| 8. | Welder | 50 | 1300 |
| 9. | Fabricators | 50 | 1300 |
| 10. | Electrician - Construction | 50 | 1300 |
| 11. | Sewerage Technician | 50 | 1300 |
| 12. | AC Technician | 50 | 1300 |
| 13. | Duct Man & Insulter | 50 | 1300 |

TERMS & CONDITIONS OF EMPLOYMENT:
1. Accommodation is provided by employer free 2. Food allowance will be paid AED 200/- 3. Transport will be provided bye employer from accommodation to work place and return 4. Insurance will be provided by the employer 5. Medical will be provided by employer free 6. Duty days 48 hrs a week as per roster and one day off 7. Probation 03 months from the date of joining for duty 8. Contract period 02 years and renewable 9. Overtime payment, if worked will be paid as per the labour law of the country 10. Return air ticket will be provided workers on completion of two (2) years contract period 11. All other terms and conditions of employment as per the labour law of the country of the employment
All other terms and conditions of employment as per the labour law of the country of the Employment.
Government approved charges Rs. 313,742
subject to change according to the exchange rate AED 83.99 SL Rs. 1

**Al-Jaber International Solutions (Pvt) Ltd.**
HOTLINE 0723886408 0768246408
No. 04, 16th Lane, Colombo 03.
Email: cvalajersrilanka@gmail.com
Tel: 0760645898
AL/2573/Advt./0225

**காணி விற்பனைக்கு**
- ஆனையிறவு

ஆனையிறவு, பச்சிளைப்பள்ளி/ இயக்கச்சி, A9 வீதிக்கு அருகாமையில் உள்ள 10 ஏக்கர், 10 பரப்பு வெறும் மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
+94760265203

**வீடு விற்பனைக்கு**

கல்கிசை காலிவீதிக்கு அருகில் காபட் ரோட் முன்பாக 4 Perches இல் 2 படுக்கையறைகள், வாகனத்தரிப்பிடம் வசதியுடன் 2 தட்டுவீடு விற்பனைக்குண்டு.
விலை 1.55mm பேசித்தீர்மானிக்கலாம்.

0763 345 586

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07.06.1936 — மறைவு 15.12.2023



**அமரர் யோகரட்ணம் கனகசபாபதி**

திதி: கார்த்திகை மாத வளர்பிறை திருதியை


கதவோரம் வருகைக்கான காத்திருப்புகள்
பரிவாய் சமையலறையில் பரிமாறிய தருணங்கள்
பாசத்தோடு பூட்டியுடன் கொஞ்சி விளையாடிய மணித்துளிகள்
ஆதரவாய் அமர்ந்து சொல்லும் போதனைகள்
இன்னும் எத்தனையோ நினைவுகள் கண் முன்னே மின்னி மறையும்
சீராட்டி பாராட்டி இன்புற்று, பூவுலகை நீத்து
விண்ணுலகம் தனிலே செம்மையாய் வாழ்ந்திருப்பீர்கள்
உங்கள் ஆசிகளோடும் நினைவுகளோடும்
இரண்டாம் ஆண்டு நினைவில்
பாசமுடன் உம்மை வணங்குகிறோம்...

விஜயாபதி,
கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய்.

நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

(CS 30741) E

## பகவான் ஸ்ரீ சத்ய ஸாய் பாபாஜிக்கு என்றென்றும் எம் இதயம் நிறைந்த 100வது பிறந்தநாள் வாழ்த்துக்கள் கோடி ...



சத்தியம், தர்மம், சாந்தி, பிறேமை, அகிம்சை என்னும் ஸாயியின் கோட்பாடுகளை மனதில் இருத்தி "Help ever, Hurt never" "Love all Serve all" என்னும் அவரது தாரக மந்திரத்திற்கு ஏற்ப பகவானின் வழிகாட்டலில் நாம் அனைவரும் பயணித்து நலன் பெறுவோமாக.

**சாயி அன்பர்**
**சிவா பூபால் - கனடா**

(CS/59989) J-1

## பதில் பிரதம நீதியரசராக லலித் ஷிரான்

கொழும்பு, நவ. 23

உச்ச நீதிமன்ற நீதிபதி அந்தணி லலித் ஷிரான் குணரத்ன, நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முன்னிலையில் பதில் பிரதம நீதியரசராக பதவியேற்றார். பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன வெளிநாடு சென்றுள்ள நிலையில், அவர் நாடு திரும்பும் வரை ஜனாதிபதி இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். (ச)

## முன்னாள் எம்.பி.களுக்கு கருணைத் தொகை


ஓய்வுபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கருணை உதவித் தொகை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. கோரிக்கைகளை முன்வைக்கும் உறுப்பினர்களுக்கு அவர்களின் தேவைகளைத் தெரிவிப்பதன் மூலம் இந்த உதவித் தொகையை வழங்க திட்டமிட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 05 . 1944



மறைவு
20 . 11 . 2025

## யோகராஜா கிருஷ்ணன் செல்லத்துரை

**(முன்னாள் Public works Department உத்தியோகத்தர்)**

யாழ்ப்பாணம் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், கனடா Ajax ஐ வசிப்பிடமாகவும் கொண்ட யோகராஜா கிருஷ்ணன் செல்லத்துரை அவர்கள் 20.11.2025 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை - கிருஸ்ணன் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், அந்தோனிப்பிள்ளை - அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், றோஸ்மலர் அவர்களின் அன்புக் கணவரும், கரோலின் (கனடா), ரகுநிதன் (கனடா), ரவீந்திரன் (கனடா), ரகுநாதன் (கனடா), ரகுரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சார்ள்ஸ் (கனடா), சுவீற்றா (கனடா), அனுசுயா (கனடா), அருந்ததி (கனடா), அனுறிகா (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசமணி, தம்பிப்பிள்ளை, இராசம்மா மற்றும் அன்னம்மா (கொடிகாமம்), தவமணி (கொடிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசேந்திரம், அன்ரன், ராணி, காலஞ்சென்ற ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிகான், ஸ்ரெபான் சாருக்கா, ஸ்ரெபனி, ஸ்ரெபிகா, றெனுஸ்ரன், றெவின்ஸ்ரன், ஐஸ்வர்யா, திவ்யா, பூஜா, சகான் சயன், நிசான், நிகாஸ், துர்வா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா மார்க்கம் The Chinese martys Catholic church இல் கனடா நேரம் 24.11.2025 திகதி 11.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு Christ the King catholic cemetery இல் 24.11.2025 பிற்பகல் 12.30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 59973) E

தொடர்புகளுக்கு:
ரகுரூபன் (கனடா) : 001 64796 77248
கரோலின் (கனடா) : 001 41657 89906
ரகுநிதன் (கனடா) : 001 64788 44789
ரவீந்திரன் (கனடா) : 001 64733 99391
ரகுநாதன் (கனடா) : 001 64722 87248

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 06 . 1941



மறைவு
20 . 11 . 2025

## வேணுகோபால் சுப்பையா

**(பிரபல படப்பிடிப்பாளர், உரிமையாளர் : பிறேமா ஸ்ரூடியோ, கோப்பாய், ஜோன்சன் ஸ்ரூடியோ, சுன்னாகம்)**

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேணுகோபால் சுப்பையா அவர்கள் 20.11.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேணுகோபால் - சுந்தரவல்லி தம்பதியினரின் புதல்வனும், காலஞ்சென்ற சின்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், இரத்தினத்தின் அன்புக்கணவரும், சந்திரகுமாரி, ராஜகுமார், பிரேம்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராகவன், பிரதீபா, சர்மிளி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜதுஷன், சுஜேனி விஷ்ணுகா, ஹரிஷ்ணவி, சந்தோஷ், கேருஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சரஸ்வதி (குஞ்சு), காலஞ்சென்ற நாகலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோப்பாய் வைத்தியசாலை அருகாமை, இராதம்பு கோப்பாய் மத்தி, கோப்பாய் இல் உள்ள அவரது இல்லத்தில் 25.11.2025 திங்கட்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக காலை 10 மணியளவில் கோப்பாய், கந்தன் காடு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 59785) E

இராதம்பு,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
077616023[illegible]

# மரண அறிவித்தல்

## பாலசுந்தரம் புஷ்பராசா

(டிராக்டர் மெக்கானிக்)



அன்னமலையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் புஷ்பராசா அவர்கள் 20.11.2025 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் - மாரிமுத்து தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சண்முகம்- தங்கேஸ்வரியின் பாசமிகு மருமகனும், குமாரிதேவி அவர்களின் அன்புக் கணவரும் அருள்யோதி, ஜயயோதி (பிரான்ஸ்), அனுஷா (ஆயுள்வேத வைத்தியர் கைதடி சித்த போதனா வைத்தியசாலை), தட்ஷிகா, விஜயரூபன் (வடிவமைப்பாளர் - எவகிறீன் பிறின்டஸ்), பிரதீபராசா (பக்கவடிவமைப்பாளர் -உதயன் பணிமனை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திலீபன், சுரேஸ்குமார்(பிரான்ஸ்), கஜேந்திரன் (அதிபர் - கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) நிறோஜன், நர்சுயா (கொமர்ஷல் வங்கி), சர்மிஜா ஆகியோரின் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சபீனா , டர்வினா, அனீஸ், அஜய், அகிஷா, ரஸ்மிதா, ரித்வி, கிரிஷ்விக், தஷ்விதன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நவாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை

தகவல்
குடும்பத்தினர்

## யானைகள் அதிகரிப்பு

கொழும்பு, நவ.23
இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுற்றாடல் அமைச்சினால் வெளியிடப்பட்ட தரவுகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, 2024ஆம்ஆண்டில் இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை 7,451ஆக அதிகரித்துள்ளது. 1993 ஆம் ஆண்டில் 1,967 யானைகளும், 2011 ஆம் ஆண்டில் 5,879 யானைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2021 முதல் 2024 வரையான காலப்பகுதியில் மாத்திரம் யானைகளின் எண்ணிக்கை 1,572 ஆக அதிகரித்துள்ளது. (ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 11 . 1950



மறைவு
20 . 11 . 2025

## சந்திராதேவி தியாகராஜா

உடுவிலைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திராதேவி தியாகராஜா அவர்கள் கடந்த (20.11.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், நாகேந்திரம், ஜெயக்குமார், ஜெயச்சந்திரகுமார் மற்றும் பவளம், விமலாதேவி, கமலாதேவி, மாலினி, ராதாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகராஜாவின் அன்பு மைத்துனியும், சுதர்ஜினி (சுவிஸ்), சுபாஜினி (சுவிஸ்), சுபோஜினி (பிரதேச செயலகம், காரைநகர்), காலஞ்சென்ற சுகிர்ஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாஸ்கரன் (சுவிஸ்), மதனபாலன் (சுவிஸ்), கஜன் (பிரதேச செயலகம் உடுவில்), சங்கர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பானுஜா, துஷிக்கா, நிஷா, மதுஜன், அபிஷேக், அக்ஷயா, தேசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அறொன், சொஹான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
பாஸ்கரன் - 0041 79 664 9926
மதனபாலன் - 0041 79 673 2120
கஜன் - 077 620 0979
சங்கர் - 00141 647 37526
சுதர்ஜினி - 077 336 9518
[illegible], சண்டிலிப்பாய்.

(CS/59974) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள அபாய எச்சரிக்கை

கொழும்பு, நவ. 23

நாடு முழுவதும் பெய்து வரும் கனமழை காரணமாக பல பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களு கங்கையின் கிளை ஆறான குடா கங்கையின் மேல் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கணிசமான அளவு மழை பதிவாகியுள்ளதுடன், மேலும் மழை தொடர்ந்து வருகிறது. தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம் அதிகம் இருப்பதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, மக்கள் மற்றும் வாகன சாரதிகள் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு நீர்ப்பாசனத் துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

# பணமோசடி நால்வர் கைது

கொழும்பு, நவ. 23

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபடும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் நான்கு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ச)




ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மிகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
**அம்மன் அருள்வாக்கு**

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா?
- பிரிவால் வேதனையா?
- தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?
- வளைகாப்பு சடங்கு முறைப்படி செய்து தரப்படும்.



இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுதி பெற்றுக்கொள்ளவும்)
தொடர்புகளுக்கு: 077 281 1234

## வீடு வாடகைக்கு உண்டு

இலக்கம் 44, அரசடி வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தில் நல்ல சூழலில் அமையப்பெற்ற மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. முழு வீடாகவோ, தனி அறைகளாகவோ வாடகைக்கு கொடுக்கப்படும். தனியார் நிறுவனங்கள், அரசஉத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வெளிமாவட்டத்தில் இருந்து தங்கிநின்று வேலை செய்வோர் தொடர்பு கொள்ளவும். மேலதிக தொடர்புகளுக்கு
க.கு. திவாகரன் - Whatsapp - 0044 730 408 7541
சி. ஆரூரன் - 075 645 8817
(CS/30746) J-1

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கிவரும் சுப்பர் மார்க்கட் மற்றும் பல சரக்கு கடைக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- Sales Assistant
- Computer Billing
- Accountant
- Packging
- Manager
- Driver
- Store Keeper
- Part time 5 p.m to 10 p.m

வயது எல்லை 18 - 40
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது
தொடர்பு: 077 419 5209, 077 419 5218

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Wealth Planner | 0755195745 |
| Branch Manager | 0778892934 |
| Medicine Store Assistant | 0752217661 |
| Technical Support Work | 0779232432 |
| Development Manager | 0778892934 |
| Marketing Manager | 0777251269 |
| Online Sales Assistant | 0767042891 |
| Photo,Video Grapher | 0770280224 |
| சிற்றூண்டி தயாரிப்பவர் | 0779271122 |
| Vehicle Service Boy | 0774121100 |
| Cleaning Staff | 0762240110 |
| Sales Assistant /Designer | 0755113680 |
| Security(info@royalfolurmills.com) | 0761526845 |
| Fort light Vehicle Driver | 0714952751 |
| Video Editing | 0776040400 |
| Granite & Tile Workers | 0772025118 |
| Leasing Officer | 0755489898 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக
யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :
dewmasweb.com

வேலையாட்கள் தேவையா?
0760984532

DEWMAS, 51, Amman Road, Nallur

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.
மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியாவில் இயங்கும் மருந்தகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- முகாமையாளர் (ஆண் / பெண்) : 3 - 5 வருட அனுபவமுள்ளவர்கள்
- காசாளர் (பெண்) : கணனி அறிவு, Food city இல் வேலை செய்த அனுபவமுள்ளவர்கள்

(CS 59982) E
தொடர்புகளுக்கு: 077 711 1831

## கடை வாடகைக்கு

மானிப்பாய் வீதி ஆலடி சந்தியில் கடை வாடகைக்கு உண்டு.
12 அகலம், 27 நீளம்
தொடர்பு: 077 411 8851, 077 505 8561

## வீடு, காணிகள் விற்பனைக்குண்டு

நல்லூர், கல்வியங்காடு, கோப்பாய் இராச பாதை, உரும்பிராய், கோண்டாவில், நாவற்குழி, கோப்பாய் ஆகிய பகுதிகளில் காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 084 0453, 077 193 3490

## ILANGO PHYSICS A+ → ADMISSION

Classes Available :
- **O/L Mathematics** (Tamil & English Medium)
- **A/L Physics** (Regular & Repeat) (Tamil & English Medium)

Experienced Teaching | Limited Seats
Location : Nallur, Jaffna.
(CS/59972) J-1
Contact : 076 590 8662


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 12 . 06 . 1947
மறைவு 21 . 11 . 2025

எமது பாடசாலை ஆசிரியர்கள்
திருமதி சுகந்தா ஜெயரூபன், திருமதி உதயசிறி தமிழ்மாறன்
ஆகியோரின் அன்புத் தாயார்

**அமரர் முருகையா கண்மணி**

அவர்கள் கடந்த (21.11.2025) வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த ஆனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்


## நாய்க்குட்டி தேவை

றொட்வீலர் நாய்க்குட்டி தேவை.
தொடர்பு: 077 659 0606

## அறைகள் வாடகைக்கு உண்டு

யாழில் படிக்கும், வேலைபார்க்கும் பெண்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 369 8553

## பெண் பணியாளர் தேவை

வீட்டில் தங்கிநின்று வயோதிப தாய் தந்தை இருவரையும் பராமரிக்க பெண் பணியாளர் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 075 272 4964

## வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், கோண்டாவில், கோப்பாய் ஆகிய இடங்களில் இணைந்த குளியலறையுடன் கூடிய தனி வீடு வாடகைக்குத் தேவை.
(CS/30393) J-1
தொடர்பு: 070 330 1773

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
1 சதுர அடி - 85 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 110 ரூபா
(CS 59978) E
தொடர்பு: 077 334 1281

## காணி விற்பனைக்கு

மீசாலை இராமாவில் கந்தசாமி கோயில் எதிர்ப்பக்கம் A 9 வீதியில் ரயில் பாதைக்கு அருகில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 210 3740, Whatsapp 004 917 432 38328

## சிறுநீரகம் தேவை

$B^+$ குருதியை உடைய சிறுநீரக நோயாளிக்கு $B^+$ / $O^+$ வகைக்குரிய சிறுநீரகம் உடனடியாக தேவைப்படுகிறது.
தொடர்புகளுக்கு
TP: 077 844 5133, 077 499 9936


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வெள்ளநீர் வழிந்தோட மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.23

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் அடைமழை காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் வெள்ளநீர் வழிந்தோடக் கூடிய வகையில் தற்காலிக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி வி.மதிவதனியின் பணிப்பில் மாநகரசபையின் பிரதி முதல்வர், மராமத்துக் குழுத் தலைவர், சுகாதாரக் குழுத் தலைவர் மற்றும் வட்டாரங்களின் உறுப்பினர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-41-66)



## தீவகத்தின் பிரதான வீதிகளில் அடையாளக் குறியீடுகளை நிறுவுக

### வேலணைப் பிரதேசசபையில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்.நவ.23

மக்களது பாதுகாப்புக் கருதி, வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பாடசாலைகள், ஆலயங்கள் உள்ளிட்ட முக்கியமான இடங்களை வாகனச் சாரதிகளுக்கு அடையாளப்படுத்தி, வீதி அடையாளக் குறியீடுகளைக் காட்சிப்படுத்துவதுடன், வேகக் கட்டுப்பாட்டு அடையாளக் கம்பங்களையும் பொருத்தவேண்டும் என்று வேலணைப் பிரதேசசபை அமர்வில் வலியுறுத்தப்பட்டது.

சபையின் மாதாந்த அமர்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் உறுப்பினர் திருமதி அனுசியா ஜெயகாந் சபையில் இந்த முன்மொழிவைச் சமர்ப்பித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவகப் பகுதியின் மையமாகவுள்ள வேலணையின் பிரதான வீதிகளில், வீதிக்குறியீடுகள், வேகக்கட்டுப்பாடுகள் உள்ளிட்ட அடையாளங்கள் காட்சிப்படுத்தப்படவில்லை. தீவகத்தை நோக்கி நாளாந்தம் தென்பகுதியில் இருந்து சுற்றுலாவிகளுடன் நூற்றுக்கணக்கான பேருந்துகள் வருகின்றன. அத்துடன் டிப்பர் வாகனங்களும், கட்டுமானப் பொருள்களுடன் அதிவேகமாகச் செல்கின்றன. இதனால் விபத்துகளும் அதிகரித்துள்ளன. எனவே மாணவர்கள் மக்களது பாதுகாப்புக் கருதி வீதிக் குறியீடுகளை முறையாகக் காண்பிக்க துறைசார் தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (க-27)

## இராசபாதை வீதிக்கு ஒளியூட்டல்!



யாழ்ப்பாணம், நவ.23

கோப்பாய் இராசபாதை வீதியில் ஒளிராத வீதி விளக்குகள் அகற்றப்பட்டு புதிய மின்விளக்குகள் நேற்றுப் பொருத்தப்பட்டன.

வலி.கிழக்குப் பிரதேச சபையின் நிதியில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதேவேளை குறித்த பகுதியில் இரவு வேளைகளில் மின்வெளிச்சமின்றி திருட்டுகள் இடம்பெற்று வருவதாகப் பொதுமக்களால் அச்சம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-17)

## 1,400 கிலோ போதைப்பொருள் ஒக்ரோபருக்குப் பின்னர் மீட்பு!

கொழும்பு, நவ.23

கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தேசிய போதைப் பொருள் ஒழிப்பு நடவடக்கையின் கீழ் இதுவரை ஆயிரத்து 400 கிலோவுக்கும் அதிக போதைப்பொருள்கள் கைப் பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம்வரை நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட 23 ஆயிரத்து 891 சுற்றிவளைப்புகளில் 23 ஆயிரத்து 550 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் 26 சந்தேக நபர்களுக்கு எதிராகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

638 சந்தேக நபர்கள் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். 614 சந்தேக நபர்களுக்கு தடுப்புக் காவல் உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது, 650 கிலோ ஐஸ், 553 கிலோ கஞ்சா, 133 கிலோ ஹெரோய்ன், 59 கிலோ மாவா, 32 கிலோ ஹஷிஷ், 16 கிலோ குஷ் மற்றும் 13 கிலோ மதனமோதகம் ஆகிய போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் பலமிழந்தால் நாமலுக்கே வாய்ப்பு



**கொழும்பு,நவ.23**

**சஜித் பலத்தைக் காட்டும்வரை நாமல்தான் எதிர்க்கட்சித் தலைவர் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். நுகேகொட கூட்டம் குறித்து தனது முகநூல் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

சில மாதங்களுக்கு முன் சொந்த ஊரிலேயே 50 பேரைக் கூட திரட்ட முடியாத நிலையில் இருந்த நாமல் கட்சி இன்று தமது பலத்தை காட்டி உள்ளது. இந்தக் கூட்டத்தை வைத்து அரசை உடனடியாகக் கவிழ்க்க முடியாது. அது பகல் கனவே. இது, அரசுக்கு சவால் விடும் கூட்டம் என்பதைவிட, தேசத்தின் பிரதான எதிர்க்கட்சி யார் என நிலை நாட்டுவதே அங்கே முதல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2019 இல் கோத்தாவுக்கும், பின் 2024ல் அநுரவுக்கும் வாக்களித்த அதே 69 இலட்சம் மக்கள், விரும்பினால் தாய் வீடு திரும்பலாம் என்பது நாமலின் கருத்து. எதிர்க்கட்சித்தலைவரான சஜித், இப்படி ஒரு கூட்டத்தை வெளியே கூட்டிக் காட்டும்வரை நாமலுக்கே வரவேற்புக் கிடைக்கும்- என்றார். (ச-இ)



# மாவீரர்களுக்கு நினைவேந்தல்

கிளிநொச்சி,நவ.23

கிளிநொச்சிமாவட்டத்தில் சுண்டிக்குளம் சந்திப்பகுதியில் மாவீரர்களின் பெற்றோர் நேற்றுமுன்தினம் மதிப்பளிக்கப்பட்டனர்.

சுண்டிக்குளம் சந்தியில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, மாவீரர்களின் பொது திருவுருவப் படத்தைத் தாங்கியவாறு சுண்டிகுளம் சந்தியிலிருந்து ஒழுங்குபடுத்தப்பட்ட மண்டபம் வரை பெற்றோர் மற்றும் உறவினர்கள் வீதி ஊடாக மங்கள வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டனர்.

அங்கு ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளும், மலர் வணக்கமும் இடம்பெற்றது. தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிக்கப்பட்டனர். (க-113)



# சொற்பொழிவும் நிதியுதவியும்

யாழ்ப்பாணம், நவ.23

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக மகாபாரதம் எனும் தலைப்பிலான தொடர் சொற்பொழிவும் உதவிகள் வழங்கலும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆசிரியரும், சைவப்புலவருமான இரா. செல்வவடிவேல் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார். சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் பல்வேறு பணிகளுக்காக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நிதியுதவிகள் நேரடியாக வழங்கப்பட்டன. (ச-41-66)

# உயிர்க்கொடை

யாழ்ப்பாணம், நவ.23

மாவீரர் நாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இரத்ததான நிகழ்வு கடந்த வியாழக்கி ழமை ஆரம்பமாகி இடம்பெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவின ரின் பங்கேற்பில் சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்கப் பொது மண்டபத்தில் இடம்பெற்ற இரத்த தான நிகழ்வில் பலர் பங்கேற்று குருதிக் கொடை வழங்கியுள்ளனர். (ச-100)



## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 11 . 1996



மறைவு 19 . 11 . 2025

**இராஜகுலேந்திரன் பிருந்தன்**

தூதாவளை, கரணவாய் கரவெட்டியை பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகுலேந்திரன் பிருந்தன் அவர்கள் கடந்த (19.11.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் மரியாம்பிள்ளைலோட் இராஜகுலேந்திரன் ராஜினி தம்பதியரின் அன்பு மகனும், சத்தியமூர்த்தி (பிரான்ஸ்) - சசிகலா (பிரான்ஸ்) தம்பதியரின் மருமகனும், உஷாலக்ஷி (லக்ஷி) அவர்களின் பாசமிகு கணவரும், பிரவீன் (பிரான்ஸ்), தனுஷன், டிக்ஷனா (சுவிஸ்), கிரிஷனா (ஜேர்மனி), டிலுசனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கெவின் (சுவிஸ்), கரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், மரியாம்பிள்ளைலோட் - ஜெயம், நடராஜா (சுவிஸ்) - அற்புதமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.11.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்

**தூதாவளை,**
**கரணவாய், கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 263 0313**

# இடர் அபாயத்தைத் தடுக்க மன்னாரில் முன்னேற்பாடு

மன்னார்,நவ.23

மன்னார் மாவட்டத்தில், தற்போதைய பருவ கால மழையால் ஏற்படும் அபாயங்களைத் தடுக்கும் நோக்குடன் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மக்களுக்கும் முன்னெச்ச ரிக்கை அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள் ளன. இது தொடர்பில் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் இதுவரை குறைந்த அளவு மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது. குறிப்பிட்ட சில பிரதேசங்களில் அதிக அளவான மழை வீழ்ச்சி கிடைத்துள்ளது. எனினும் மாவட்டத்தில் எவ்வித இடர்களும் பதிவாகவில்லை. இடர் அபாயங்களை எதிர்கொள்வது தொடர்பில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனைய திணைக்களங்கள் ஊடாக வடிகான்கள், கழிவு நீர் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. மன்னார் முருங்கன் கட்டுக்கரைக் குளத்தில் தற்போது 9.4 அடி நீர்மட்டம் உள்ளது. குறித்த குளம் 11.56 அடி அளவிலேயே வான் பாய்வதற்கான நிலை ஏற்படும். வளிமண்டல திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழமுக்கம் உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. அந்தக் காலப்பகுதியில் காற்று சுழற்சியாக மாற்றமடையும்.

குறித்த காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகும். அவ்வேளையில் காற்றின் வேகமும் உயர்வாகக் காணப்படும். காற்றின் வேகம் அதிகரித்தால் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே கடற்றொழிலாளர்கள் அவதானமாகத் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இடர் பாதிப்புகள் ஏற்படின் 023 2117117 மற்றும் 0232250133, 077 2320529 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும்- என்றார். (க-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறந்தோரை...

கிளிநொச்சிக்குச் சென்றுள்ள அமைச்சர் பிமல், நேற்றுமாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்தாவது:

போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், அது மக்களின் ஜனநாயக உரிமையாகவே அமைந்துள்ளது. எமது அரசாங்கம் வருவதற்கு முன்னர் மக்கள் இறந்தோரை அஞ்சலித்துள்ளனர். எனவே, இதுவொரு பாரம்பரியம். இதற்குத் தடைபோட முடியாது.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைந்து விட்டது. இப்போது இரண்டாவது வருடம். நாங்கள் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுத்துள்ளோம். எமது ஆட்சியில் அஞ்சலிப்பு நிகழ்வுகளுக்குத் தடைகள் இருக்காது. பாதுகாப்புப் படையினரும் கெடுபிடிகளை வழங்கமாட்டார்கள் - என்றார். (அ-ம-113)

## யாழ்.உள்ளக....

யாழ்ப்பாணம் பழையபூங்கா பகுதியில் உள்ளக விளையாட்டு அரங்கொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. இதற்கான அடிக்கல்லே இன்று காலை 9 மணியளவில் நடப்படவுள்ளது.

நிகழ்வில், போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க கலந்து கொள்ளவுள்ளார். (அ-ம-26)

## யாழ்ப்பாண....

இது தொடர்பில் அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:

யாழ்ப்பாணம் பழைய பூங்கா யாழ்ப்பாணத்தின் தொன்மைவாய்ந்த அடையாளம் மாத்திரம் அல்ல. வாகன நெரிசல் மிக்க யாழ். நகரின் கரிக்காற்றை உறிஞ்சிச் சுத்தம் செய்யும் ஓர் பிரமாண்டமான காா்பன் வடிகட்டியாகவும் செயற்பட்டு வந்துள்ளது. ஆனால், தொலைநோக்கற்ற, நீடித்து நிலைக்கும் பண்பற்ற அபிவிருத்தித் திட்டங்களால் தற்போது பழைய பூங்கா கட்டடக் காடாக மாறியுள்ளது. ஆளுநர் செயலகம், நில அளவைத் திணைக்களம், நீர்வழங்கல் வடிகால் சபை, தேர்தல் திணைக்களம், கூடைப்பந்தாட்டச் சம்மேளனம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் ஆகியனவற்றின் ஆக்கிரமிப்பில் பூங்கா ஏற்கனவே மூச்சுத்திணறிக் கொண்டிருக்கிறது.

ஆங்கிலேயர் காலத்தில் மீளப்பெற முடியாத அழியா நன்கொடையாக வழங்கப்பட்ட 9.67 ஹெக்ரேயர் நிலப்பரப்பைக் கொண்ட பழைய பூங்காவில் தற்போது எஞ்சியுள்ளது 5.19 ஹெக்ரேயர் நிலப்பரப்பு மட்டுமே. மீதமாகவுள்ள இப்பகுதியில் கூடைப்பந்தாட்ட மைதானம், வலைப்பந்தாட்ட மைதானம் மற்றும் வாகனத்தரிப்பிடத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலம் ஆகியனவற்றை உள்ளடக்கி உள்ளக விளையாட்டரங்கு அமைக்கப்படவுள்ளது. இது இயங்கத் தொடங்கும்போது பார்வையாளர்களின் வருகையின் பொருட்டு சூழ உள்ள பகுதியும் அபகரிக்கப்படும் அபாயமே உள்ளது. இந்த அழிப்பை அங்கே அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவால் ஒருபோதும் சமம் செய்யமுடியாது.

பழைய பூங்காவில் விடுதலைப்புலிகளின் காவல்துறை நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் அவர்களால் பூங்காவின் மரங்கள் அழிக்கப்படவில்லை. நிரந்தரக் கட்டுமானப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. வடக்கின் தற்போதைய ஆளுநர் நா.வேதநாயகன் யாழ். மாவட்டச் செயலராகப் பதவி வகித்த போது புதிய கட்டுமானப் பணிகள் எதனையும் பழைய பூங்காவில் அனுமதிப்பதில்லை என்ற தீர்க்கமான முடியவை எடுத்திருந்தார். இப்போது, அவர் ஆளுநராகப் பதவி வகிக்கும் போது புதிது புதிதாகக் கட்டடங்கள் முளைக்க ஆரம்பித்துள்ளன.

ஆளுநர் உடனடியாக இதனைத் தடுத்து நிறுத்தி, உள்ளக விளையாட்டு அரங்குக்கு மாற்று நிலத்தை ஏற்பாடு செய்ய முன்வரவேண்டும் - என்றுள்ளது. (ம-26)

## மயக்க...

வர் டானியல் வசந்தனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும், அண்மைக் காலமாக மயக்க மருந்து நிபுணர்கள் இல்லாமலேயே மருத்துவமனை இயங்கி வருகின்றது. இதனால், சிறிய விபத்துக் காயங்களுக்கும் மேலதிக சிகிச்சைக்காக நோயாளிகள் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்படுகின்றனர். இதனால், நோயாளிகளுக்கும் மருத்துவமனை நிர்வாகத்தினருக்கும் இடையில் அதிருப்தி நிலை நீடித்து வருகின்றது. இதுவொரு பெரும் பிரச்சினையாக உள்ள நிலையில், இதற்கு விரைவான தீர்வை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-56)

## இலங்கையர்...

கொழும்பு, நவம்பர் 23

டிசெம்பர் மத்திய பகுதியில் நடைபெறவுள்ள இலங்கையர் தினத்துக்கு ஆதரவை வழங்குமாறு, தமிழ், முஸ்லிம் தலைவர்களுடன் ஜனாதிபதி அநுர நேற்று நேரில் கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் இலங்கையர் தினம் தொடர்பில் எதிர்க்கட்சிகளில் உள்ள தமிழ், முஸ்லிம் தலைவர்களுடன் ஜனாதிபதி அநுர விரிவான கலந்துரையாடல் நடத்தியுள்ளார். ஜனாதிபதி அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

கலந்துரையாடலின்போது, 'அனைத்து மத மற்றும் கலாசார அடையாளங்களையும் மதித்து, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளும் சுதந்திரமாக வாழ வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கையர் தினத்தை நடத்த வேண்டும்' என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இனவாத வலையில் சிக்கி விடாமல் அரசாங்கத்தின் திட்டங்களுக்கு ஆதரவை வழங்குமாறு அவர் தமிழ், முஸ்லிம் தலைவர்களைக் கோரினார்.

ஜனாதிபதியின் அழைப்பையும், முயற்சியையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராட்டினார்கள். அத்துடன், இந்தத் திட்டத்துக்கு தமது ஒத்துழைப்பு எப்போதும் இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். சமூகங்களுக்கு இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன், அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து இலங்கையர் தினம் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம-26)

## உடைமையில்....

துத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மீன்பிடிக் கப்பல் மூலம் இலங்கைக்கு போதைப்பொருள் கடந்த முற்பட்ட போது காலிக்கு அப்பால் உள்ள சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து கடந்த 2019ஆம் ஆண்டு அவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

அனைவருக்கும் எதிராக 2021ஆம் ஆண்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. சந்தேகநபர்கள் ஐவருடைய குற்றங்களும் உறுதியாகிய நிலையில், 2023ஆம் ஆண்டு அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பை எதிர்த்து பிரதிவாதிகள் மேன்முறையீடு செய்த நிலையில், மேன்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. இதன் போதே, அவர்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட முன்னைய தீர்ப்பை நீதிமன்றம் உறுதிப்படுத்தி மரண தண்டனை விதித்துள்ளது. (ம-இ)

## மோ.சைக்கிள்...

துள்ளனர்.

பருத்தித்துறை நகர் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், வீதியின் வலது புறமாக திரும்ப முற்பட்ட ஓட்டோவுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. உயர்தர பரீட்சைக்கு சென்று திரும்பிய மாணவனே விபத்தில் சிக்கி காயமடைந்துள்ளார். பருத்தித்துறை போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-100)

## போதைப்பொருள்...

பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் போதைப்பொருளை முற்றாக அழிக்கும் செயற்பாட்டில் அதிதீவிரமாக இயங்கிய முதலாவது ஜனாதிபதி நான்தான். எனக்கு முன்னர் சில ஜனாதிபதிகள் செயற்பட்ட போதிலும், போதைப்பொருள்களை எரித்து அழிக்கும் உத்தரவை முதன்முதலில் நானே பிறப்பித்தேன். அத்துடன், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கும் உத்தரவையும் நானே பிறப்பித்தேன். ஆதலால், ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப்பொருள் எதிர்ப்புத் திட்டத்தை நான் வரவேற்கின்றேன் என்றார். (ம-இ)

## யாழ்.குருநகர்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

இன்னும் சில தினங்களில் வெளிநாட்டுக்குச் செல்லவிருந்த அவர், குருநகர் அட்டைப் பண்ணையைப் பார்வையிடுவதற்காகச் சென்றவிடத்தில் நேற்று முன்தினம் இரவு காணாமற் போயிருந்தார்.

இந்த நிலையில் நேற்று அவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்த இளைஞர் படகில் இருந்து தவறி வீழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26,20,66)

## ரஷ்யா கைப்பற்றிய பகுதியை ரஷ்யாவிடமே ஒப்படையுங்கள்!

*உக்ரைனை வலியுறுத்தினார் ட்ரம்ப்*

வொஷிங்டன், நவ. 23

அமெரிக்கா முன்வைத்துள்ள அமைதித் திட்டத்தை உக்ரைன் அங்கீகரிக்க வேண்டும். இதில் விட்டுக்கொடுப்பில்லை என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைனிடம் இருந்து ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை, ரஷ்யாவுக்கு உரியது என விட்டுக்கொடுத்து அமைதியை ஏற்படுத்துமாறு அதிபர் ட்ரம்ப் பரிந்துரை முன்வைத்துள்ளார். இத்தகைய போர் நிறுத்த முயற்சிக்கு ரஷ்யாவும் சம்மதம் தெரிவித்துள்ளது. இதையடுத்தே, 'அமெரிக்காவின் திட்டங்களை உக்ரைன் ஏற்றாக வேண்டும்' என்று ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். உக்ரைன் - ரஷ்யா இடையிலான மோதல்கள் நீடித்துச் செல்வதை அனுமதிக்கப் போவதில்லை. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகசில விட்டுக்கொடுப்பைச் செய்வதற்கு உக்ரைன் தயாராக இருக்க வேண்டும். அழிவுகளை மட்டுமே உக்ரைன் சந்தித்து வருகின்றது என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பேச்சுகளை நடத்துவதற்கு ரஷ்யத் தரப்பு நெருங்கி வருகின்றது. இதை நல்ல அறிகுறியாகப் பார்க்க முடிகின்றது. எனவே, அமைதிக்கான நகர்வை உக்ரைன் குழப்பினால், அதற்கான உதவிகள் நிறுத்தப்படும் என்று அதிபர் ட்ரம்ப் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், நவ.23

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 82ஆவது இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை, நெடியகாடு பகுதியில் அமைந்துள்ள கணபதி மஹாலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. யாழ்.போதனா மருத்துவமனையின் இரத்த வங்கியில் தொடர்ந்தும் குருதித் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்கம் மற்றும் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இரத்த வங்கி மருத்துவப் பணியாளர்களால் இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப் பட்டது. (ச-41-100)



உலக சித்தன்கேணி ஒன்றியத்தின் அனுசரணையில் சித்தன்கேணி ஆன்மிக அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் பரிசளிப்பு விழா யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ச-25.66)

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 02 . 1949



மறைவு 20 . 11 . 2025

## துரைச்சாமி இராஜேஸ்வரி

(போதனாசிரியை பனை அபிவிருத்திச் சபை)

சாவகச்சேரி, கல்வயல், சித்தன் மாவடியைச் சேர்ந்த துரைச்சாமி இராஜேஸ்வரி (போதனாசிரியை பனை அபிவிருத்திச் சபை) அவர்கள் கடந்த (20.11.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கண்ணகைப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும், துரைச்சாமியின் அன்பு மனைவியும், சத்தியபாமா, கேமலதா, சத்தியவாணி காலஞ்சென்ற சத்தியநாராயணன், சத்தியவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவலிங்கம், ராகுலன், சந்திரகாசன், மற்றும் சுதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சஞ்ஜயா, அம்றிதா,ஆரூஸ், ஆதேஷ் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ் சென்ற செல்வரத்தினம், புனிதமலர் மற்றும் சுந்தரேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23-11-2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
சித்தன் மாவடி,
கல்வயல், சாவகச்சேரி.
(CR/46560) J-1 +94 70 344 5441

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

சித்தங்கேணி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான வீதியில் வட்டுக் கிழக்கு தாவாவளை யில் பிரதான வீதியில் இருந்து 200m உட்புறமாக அமைந்துள்ளது.
6 1/2 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு: உமாகணேஸ் - 075 286 7707
Whatsapp - 001 416 881 5244
லலிதா இரத்தின சோதி - 077 372 6685

## மணமகள் தேவை

வெளிநாட்டில் விவாகரத்தான 1981ம் ஆண்டு பிறந்த உயர் இந்து (V) குலத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த குடும்பப்பாங்கான மணமகள் தேவை.
சீதனம் எதுவும் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு: 074 031 4872

## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

கைதடியில் புதிய வீட்டுடன் கூடிய 1 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 983 1044, 077 069 0896

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரில் 1 Km இற்குள் நிறுவனம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. மற்றும் 50' 40' அடி நீள அகலத்தில் கடைத்தொகுதி வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 332 2314, 077 121 6714, 077 684 8331

## மின்னிணைப்பாளர் தேவை

மின்னிணைப்பு வேலை தெரிந்தவர்களும், பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்

077 723 8292

(CS/59967) J-1

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் வாளி Factory வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 055 6787

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள வியாபார நிறுவனம் ஒன்றிற்கு பொருட்களை விநியோகிப்பதற்கு மற்றும் களஞ்சியத்தில் நின்று வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. சாவகச்சேரியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 398 0145

# மண்சரிவில் 5 பேர் பலி

கொழும்பு, நவ. 23

பஹல கடுகன்னாவ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் இடிபாடுகளுக்குள் சிக்கி இதுவரை ஐவர் உயிரிழந்துள்ளனர். இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த மேலும் இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன. மண்சரிவு ஏற்பட்ட பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்து வருதலால் மீட்பு பணிகளிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. (ச)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளையில் 3 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 075 351 7644, 077 990 5340

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு உதவியாளர் தேவை. பெண்கள் மட்டும்
சம்பளம் 100, 000/=
30 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(CS/59961) J-1

075 880 7718

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2695 / 0774290613

## வேலையாட்கள் தேவை

அங்கர் பாதுகாப்புச் சேவைக்கு வேலையாட்கள் தேவை.
12 மணித்தியாலத்திற்கு ரூபா 1700.00 வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 539 6350

## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார கடைக்கு (40 வயது உட்பட்ட) ஆண் வேலையாள் தேவை field work
சம்பளம் - (45,000/-Basic) சாரதி அனுமதி தேவை முன்னனுபவம் தேவையில்லை.
(CS/59959) J-1

தொடர்புகளுக்கு:-
078 911 3766

## பணியாளர் தேவை

முதியோர் இல்லத்தில் பணியாற்ற பணியாளர் தேவை. (பெண்)
தங்கி இருந்து பணியாற்றுவது விரும்பத்தக்கது.
(CS/59979) J-1

தொடர்புகளுக்கு:- 076 046 9430

## வேலையாட்கள் தேவை

நாவற்குழியில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்திற்கு Welder, Concrete Batching Plant operator மற்றும் Concrete truck mixer driver தேவை.
(CS/59975) J-1

தொடர்புகளுக்கு:-
077 424 4237, 077 639 3412, 077 068 5170

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் பிரபல மோட்டார் நிறுவனம் ஒன்றிற்கு வாகனம் சுத்திகரிப்பவர் (Vehicle Serviceman) தேவை.

பொறுப்புகள்: வாகன பராமரிப்பு மற்றும் சீர்செய்தல் பணிகளில் உதவுதல் மற்றும் அடிப்படை சேவைப் பணிகளைச் செய்தல் (washing)

தகுதிகள் : வாகன பராமரிப்பு அனுபவம் உள்ளவர்கள் முன்னுரிமை பெறுவர்

சம்பளம் : பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்படும்

Location: A9 சாலை, நாவற்குழி, யாழ்ப்பாணம்.
(CS/59945) J-1

தொடர்புகளுக்கு:-
077 310 4538, 076 865 0881

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 கார்த்திகை 7 ஞாயிற்றுக்கிழமை (23.11.2025) சிகரம் :166

பின்தூங்கி முன்னெழுவாள் பத்தினியின் நாடகத்தை
நன்றாகப் பார்த்திட்ட இல்லாளும் —நன்றாக
கள்ளடித்து நல்லுறக்கம் கொண்டவர்க்கு முன்னாடி
துள்ளி எழுந்தாளே மாலை.

பொன்.சுகந்தன்

# நான்கு இனத்தவர்களின் ஈகத்தாலும் கட்டியெழுப்பப்பட்ட போராட்டம்

○ மட்டுநேசன்

உதிரத்தாலும், உயிராலும், உழைப்பாலும், இனத்துக்காக அடுத்த சந்ததிக்கான விடியலுக்காக தம்மை ஆகுதியாக்கிக் கொண்டவர்கள் மாவீரர்கள். தனியே தமிழராகப் பிறந்து விட்டவர்கள் தான் என்றில்லாமல் இலங்கையில் உள்ள நான்கு இனத்தவர்களின் ஈகமும் இந்த வேள்வித் தீயில் ஆகுதியாக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தை வாக்குப் பொறுக்கிகளான அரசியல் கட்சிகளுக்குப் பூடகமாகவும் வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டினாலும் இந்த உன்னதத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் திமிர்த்தன மாக நடந்து கொள்கின்றன. மேலும் பிரதேசவாதத்தைக் கிளப்பி அதனால், கிடைக்கும் பலனை சிங்கள பெருந்தேசியவாதத்துக்கு உரமாக்கும் ஒரு பகுதியினரும் உண்டு. தம்மைப் புத்திஜீவிகள் என்று கருதிக்கொள்ளும் ஒரு கூட்டமும் மாவீரர்களின் ஈகங்களைப் புரிந்துகொள்ளாத மாதிரி நடிக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை இதன் முதல் மாவீரர் லெப். சங்கர் (செல்வச்சந்திரன் சத்தியநாதன்) . ஒட்டுமொத்த மாவீரர்களில் முதலாவதாக உரும்பிராயைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவகுமாரின் பெயரை வரலாறு பதிந்துகொண்டது. மாவீரர் பட்டியலிலும் இவரின் பெயர் உண்டு. புலிகளைத் தவிர, குட்டிமணி, தங்கத்துரை தலைமையிலான 10 பேரின் பெயர்களும் ஈரோஸைச் சேர்ந்த 266 போராளிகளின் விவரமும் இந்தப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. தவறுதலான புரிதல் காரணமாக உயிரை இழந்த ரெலி இயக்கத் தலைவரின் (கணேசானந்தன் ஜெகநாதன் ஜெகன்) பெயரும் இதில் உள்ளடக்கம். இணங்கள் என்று நோக்குகையில் பறங்கி இனத்தவர்களில் வெள்ளை என்ற இயக்கப் பெயரைக் கொண்ட இருதயபுரம், மட்டக்களப்பைச் சேர்ந்த பேனாட் எட்வேட்ஸ்ரக் என்பவரது பெயரையே வரலாறு முதலில் பதிந்து கொண்டது. நல்லூர் கோவில் வீதியில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு காரணமாக நாம் இவரை இழக்க நேர்ந்தது. இஸ்லாமிய இனத்தைச் சேர்ந்த ஓட்டமாவடியை சேர்ந்த ஜுனைதீன் எமது போராட்டத்தில் தோன்றிய 36 இயக்கங்களில் ஒன்றான தமிழீழ விடுதலை நாகங்களின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராவார். படையினரின் தேடுதல் காரணமாக புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டோரில் இவரும் ஒருவர். வடக்கில் நடைபெற்ற பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் பங்குபற்றி தமது ஆற்றலை வெளிப்படுத்தியவர். ஓவியம் வரையும் ஆற்றலும் இவருக்குண்டு. அதன்மூலம் தலைவரின் கவனத்தையும் ஈர்த்தவர். ஆயித்தமலையில் ஜோசப் என்ற போராளியுடன் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது பாரவூர்தி ஒன்றின் மறைவில் பதுங்கியிருந்த ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தியோபிலஸ் தலைமையிலான குழுவினரால் வீழ்த்தப்பட்டு கைதுசெய்யப்பட்டவர். கொழும்பில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டபோது தப்பியோடும் முயற்சியின்போது சுட்டுக்கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது. இவருடன் கைதான ஜோசப்பும் இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தார் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டது. சிங்கள இனத்தைச் சேர்ந்தோரில் தாயோ, தந்தையோ தமிழராக இருந்தோரே மாவீரர்களாகியுள்ளனர். அதிலும் மூன்று மாவீரர்களின் அன்னையாரின் குடும்ப வறுமையையேனும் அறிந்துகொள்ளாதவர்களாக அரசியல் கட்சிப் பிரமுகர்கள் இருந்துள்ளனர். அதைவிட மோசமானது. அந்த ஈகத்தின் பெறுமதியை கடந்த மாவீரர் நாள்வரை உணர்ந்துகொள்ளாமலிருந்தது. குறைந்தபட்சம் மாவீரரின் பெற்றோர் அவமானப்படுத்தப்படாமலிருக்கவேண்டும் என அரசியல்வாதிகளுக்கு அவர்களுக்குப் புரியும் மொழியில் யாராவது விளக்கினால் அது மாவீரர்களின் தியாகங்களுக்குச் செய்யும் பெரும் பங்களிப்பாகும். இவ்வாறான கோளாறு பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் இரண்டிலுமே உண்டு. எதிர்காலத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகளை மாவீரர் பெற்றோர் கௌரவிப்புகளை தமது அரசியல் எதிரிகளைச் சாடும் களமாக மாற்ற வேண்டாமென பணிவன்புடன் வேண்டுகிறோம். (திலீபன் நாள் தொடர்பான நிகழ்வுகள் உட்பட) மாவீரர் பெற்றோரை கட்சிகள் வழிநடத்தியதுபோதும். இன உறவை மேம்படுத்த முஸ்லிம் தரப்புகள் விடுத்த வேண்டுகோளை புறந்தள்ளியது மட்டுமல்லாது இந்த வேண்டுகோளை தெரியப்படுத்திய மத்தியகுழு உறுப்பினரையே ஒதுக்கிய கட்சியொன்றும் உண்டு. ஒப்பந்தகாரர்கள், முதலாளிகள் நிதியுதவி செய்தால் மட்டும் போதும். தீர்மானிக்க வேண்டாம். இனிமேலாவது மாவீரரின் உறவுகள் நாட்டுப்பற்றாளரின் சொந்தங்கள் காட்டும் வழியில் கட்சிகள் பயணிக்கட்டும். இதுவரை காலமும் தங்கள் கண்களை கட்டிக்கொண்ட கட்சிகளின் கட்டுகளை அவிழ்த்துவிட்டு அவர்களை உங்கள் வழியில் கொண்டு செல்ல முயற்சியுங்கள் உறவுகளே! அது மாவீரர் நாளென்றாலும் சரி; திலீபன் நினைவேந்தல் என்றாலும் சரி.

சிங்கள இன மாவீரர்களில் முதலாமவர் லெப்டினட் பழசு (முதுங்கொடுவ உடுகமகே ஹேமசிறி) 13.02.1985 அன்று நடைபெற்ற கொக்குளாய் இராணுவம் முகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். கேணல் கிட்டுவின் அரசியல் இராஜதந்திரத்துக்கு எடுத்துக் காட்டாகத் திகழும் கைதிகள் பரிமாற்றத்தின்போது விடுதலையான காமினி (காமினி பேபியன் அன்ஸ்டீன்) பின்னர், மட்டக்களப்பில் தனது விடுதலைப் பணியைத் தொடர்ந்தார். அங்கு 04.05.1987 அன்று வந்தாறு மூலையில் நடைபெற்ற சிறீ லங்கா சிறப்பு அதிரடிப் படையினருடனான மோதலில் வீரச்சாவடைந்தார். சிங்கள இனத்தவர்களில் லெப். கேணல் நிலையில் உள்ள போராளியும் வீரச்சாவடைந்துள்ளார். மாட்டின் சில்வா என்பவரின் மகனான ஜெயச்சந்திரன் என்பவரே 15.09.2007இல் தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாவடைந்தார்.


சுதுமலையில் உலங்குவானூர்தி மூலம் தரையிறக்கப்பட்ட படையினர் புலிகளின் முகாமை சுற்றிவளைக்க முற்பட்டபோது யாழ்ப்பாணத்திலிருந்த முஸ்லிம் போராளிகள் கையில் ஆயுதத்துடன் ஓடியே சுதுமலை நோக்கிச் சென்றனர். ஆனால், கிட்டு தலைமையில் இந்த முற்றுகை வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது. இந்த முற்றுகையின்போதே மேஜர் அல்பேட் வீரச்சாவடைந்தார். இயக்கத்தின் நிதி மற்றும் ஆயுதங்களுக்கு பொறுப்பானவர் இவர். இறுதிக்கட்டத்தில் ரெலோ குழுவினரும் விடுதலைப் புலிகளின் முஸ்லிம்போராளிகளும்சுதுமலையைச் சென்றடைந்தபோது ஏறக்குறைய முற்றுகை முறியடிக்கப்பட்டுவிட்டது. ஆயினும் யாழ்ப்பாணத்திலிருந்து ரைபிள்களுடன் ஓடியே வந்திருக்கிறார்கள் என்ற விடயம் கிட்டுவுக்கு நெகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் ஏற்படுத்தியது. முஸ்லிம் மாவீரர்களில் மூவர் லெப். கேணல் நிலையில் விளங்கியவர்களாவர். இவர்களில் ஒருவர் கடற்புலிகள் அணியைச் சேர்ந்தவராவார். முல்லைமகள் என்றழைக்கப்படும் இவரது இயற்பெயர் ஜெரினா முகைதீன் . 50 வீட்டுத்திட்டம், களப்பாடு, முல்லைத்தீவைச் சேர்ந்த இவர் 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19ஆம் நாளன்று பருத்தித்துறை கடலில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்தார்.

மாவீரர்களின் பெற்றோரே! உங்கள் பிள்ளைகள் களத்தில் காயமடைந்த சந்தர்ப்பங்களில் இவர் எந்தச் சமயம், எந்த இனம் என்றெல்லாம் சிந்திக்காமல்தான் கூட இருந்தவர்கள் தூக்கிச்சென்று சிகிச்சைபெற வைத்தார்கள். மேலாக சிகிச்சையின்போது இரத்தம் தேவைப்படுமிடத்து காயமடைந்தவர் உயிர் பிழைக்க வேண்டுமென்று நினைத்துத்தான் ஏனையோர் இரத்தம் வழங்கினர். அவர்களுக்கு இருந்த விடுதலை உணர்வுதான் உங்களுக்கும் இருக்கிறது என நாம் உறுதியாக நம்புகிறோம். எனவே, அரசியல்வாதிகளாலும் அவர்களின் கீழ் செயற்படும் ஒப்பந்தகாரர்களாலும் மேற்கொள்ளப்படும் வடிகட்டல் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரும் கடமை உங்களுக்கும் உண்டு. இதனை மேற்கொள்வீர்களாயின் உங்களின் பிள்ளைகளின் ஆன்மா நிச்சயம் உங்களை வாழ்த்தும். மூன்று மாவீரர்களின் தாயாரான அந்தச் சிங்கள அன்னைக்கு நிகழ்ந்த அவமதிப்புபோல இனி எக்காலத்திலும் நிகழாதவாறு பார்த்துக் கொள்வது எம் அனைவரின் கடமை.


பெரும்பான்மையினராக இருப்போரின் முடிவுகள்தான் நடைமுறைப்படுத்த வேண்டும் என நினைப்போமாக இருந்தால், சிங்களப் பேரினவாதத்தின் அத்துமீறலையும் முடிவுகளையும் நாம் அங்கீகரிப்பதாக அர்த்தப்படும். காரணம் எதுவாக இருந்தாலும் கைதிகள் பரிமாற்றத்தின்போது கிட்டு நடந்துகொண்ட முன்மாதிரி யான செயற்பாட்டைக் கருத்திற்கொள்வோம்.



பவமாறன்


முல்லைமகள்


வெள்ளை


காமினி


பழசு



ஜோன்சன்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தர் சிலை படும்பாடு



○ நிலாந்தன்

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் மகாசங்கத்தின் பலத்தைக் காட்டியிருக்கிறது. தமிழ்மக்கள் ஏன் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை நம்பமுடியாது என்பதை மீண்டும் ஒருதடவை நிரூபித்திருக்கிறது. சஜித் பிரேமதாஸ போன்றவர்களை நம்பி ஏன் வாக்களிக்கக்கூடாது என்பதனை நிரூபித்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கு வாக்களிக்குமாறு கேட்ட சுமந்திரனை அம்பலப்படுத்தியிருக்கிறது. புத்தபகவான் இலங்கைத் தீவில் எந்த அளவுக்கு அவமதிக்கப்படுகிறார் என்பதை மீண்டும் ஒருதடவை நிரூபித்திருக்கிறது.

உண்மையில் அது ஒரு புத்தர்சிலையில் தொடங்கிய விடயம் அல்ல. அதன் தொடக்கம் ஒரு சட்டவிரோத ரெஸ்ரோரன்ட். அந்த ரெஸ்ரோரன்ட் அமைந்திருக்கும் காணியை2014ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச பௌத்த விகாரைக்கு எழுதிக்கொடுத்தார். ஆனால் அந்த ஆவணத்தில் ஒரு முக்கியமான நிபந்தனை இருந்தது. அந்த காணியில் அவர்கள் எந்தக் கட்டுமானங்களையும் அமைக்கக் கூடாது. கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் சட்ட ஏற்பாடுகளின்படி அங்கே கட்டடங்களைக் கட்டக்கூடாது. ஆனால் அந்த நிபந்தனையை மீறி அங்கே ஒரு ரெஸ்ரோரன்டைக் கட்டுவதற்கு புத்தபிக்குகள் ஒரு தனியாருக்கு அனுமதி வழங்கியிருந்தார்கள். அந்தத் தனியார் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்.

அது சட்டவிரோதமான கட்டடம் என்று கூறி சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பொலிஸாரின் உதவியுடன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட இரண்டு கிழமைகளுக்கு முன் அவ்வாறு எதிர்ப்புக் காட்டப்பட்டதையடுத்து, அங்குள்ள பௌத்த பிக்குகள் அந்தக் கட்டடத்தில் பிரதான பகுதி தவிர ஏனைய கட்டுமானங்களை அகற்றுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதைச் செய்ய விரும்பாமல் பிரச்சினையை வேறுபக்கம் திசை திருப்பும் நோக்கத்தோடு அந்தக் காணிக்குள் அறநெறிப் பள்ளி ஒன்றுக்கான அத்திபாரத்தை அமைத்ததோடு புத்தர்சிலை ஒன்றையும் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். அந்த வளவுக்குள் ஏற்கனவே அரசமர நிழலில் ஒரு புத்தர் சிலை பல தசாப்தங்களாக உண்டு.

புத்தர் சிலையை அகற்றும் முடிவை முதலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எடுத்திருக்கிறது. அதன் விளைவாகத்தான் பொலிஸார் இரவோடு இரவாக அதனை அகற்றியிருக்கிறார்கள். மாவட்டத்தின் மூத்த பொலிஸ் அதிகாரியை பிக்குகள் அவமதித்திருக்கிறார்கள். அங்கே நிலைமைகளைக் கொந்தளிக்கச் செய்வதற்கென்று திருகோண மலைக்கு வெளியிலிருந்து மூன்று பிக்குகள் வந்திருக்கிறார்கள் என்றும் பொதுமக்கள் கூறுகிறார்கள். பிக்குகளால் ஓர் உயர் பொலிஸ் அதிகாரி அவமதிக்கப்பட்ட பின்னணியில், மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தவுடன் பொலிஸார் அந்த சிலையை அகற்றிவிட்டார்கள். ஆனால் எந்தப் பொலிஸார் அந்தச் சிலையை முதலில் அகற்றினார்களோ, அதே பொலிஸார் மேள தாளங்களோடு அந்தச் சிலையை மீண்டும் கொண்டுவந்து, எடுத்த இடத்திலேயே வைத்திருக்கிறார்கள்.

அதாவது சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் தரப்புகளை விடவும், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியை விடவும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட நாடாளுமன்றத்தை விடவும், இலங்கைத் தீவின் பௌத்த மகாசங்கம் எவ்வளவு பலமாக இருக்கிறது என்பதைத்தான் அந்தச் சிலை விவகாரம் உணர்த்துகின்றதா? தமிழ்மக்கள் ஏன் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நிரூபிக்கும் ஆகப்பிந்திய ஆதாரம் அதுவா?

அதுதொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, புத்தர் சிலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்ததாகத் தெரிவித்தார். உலகில், தேரவாத பௌத்தத்தின் ஒரே சேமிப்பிடமாகக் கருதப்படும் ஒரு நாட்டில், புத்தர் சிலைக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்க வேண்டியிருக்கிறது. தமிழ் பகுதிகளில் புத்த கோவில்களின் வாசலில் படையினர் ஆயுதங்களுடன் நிற்கிறார்கள். அகிம்சா மூர்த்தியான புத்த பகவானை இதைவிட வேறு எப்படியும் அவமதிக்கமுடியாது.

இங்கே புத்தர் சிலை ஒரு பஃவர் முன்தடுப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவராகிய ரவூப் ஹக்கீம் கூறியதுபோல “அரசாங்கம் புத்தர் சிலைகளை எல்லைக் கற்களாக நகர்த்துகிறது” என்பதும் உண்மைதான். தமிழ் மக்கள் எப்போதும் அச்சத்தோடு பார்ப்பது அதைத்தான். தமிழ்மக்கள் என்றைக்குமே பௌத்தத்தை ஒரு பகை மதமாகப் பார்த்தது கிடையாது. மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றாகப் புத்தர் பார்க்கப்படுகிறார். அறிவுபூர்வமாக பௌத்த மதத்தையும் இந்து மதத்தையும் அணுகும் தரப்புகள் புத்த மதத்தை “சீர்திருத்தவாத இந்து மதம்”reform Hinduism என்றும் அழைப்பதுண்டு. தமிழ்மக்கள் மதப்பல்வகைமைக்கு எதிரானவர்கள் அல்லர். மத மேலாண்மைதான் இங்கு பிரச்சினை.

இலங்கைத் தீவின் அரசியல் யாப்பு அவ்வாறு பெரிய மதத்துக்கு அதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால்பெரிய இனத்தைச்சேர்ந்த பெரிய மதத்துக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று அதன் ஒன்பதாவது பிரிவில் கூறியுள்ளது. அது இலங்கைத் தீவின் தேரவாத பௌத்தத்தை ஏறக்குறைய அரச மதமாக மேலுயர்த்தியுள்ளது.

புத்தபகவான் உலகியல் ஆசைகளைத் துறந்து சன்னியாசி ஆகியவர். நிலையாமையைப் போதித்தவர். ஆனால் அவருடைய போதனைகளைப் பின்பற்றுவதாகப் பெருமைப் பட்டுக் கொள்ளும் இலங்கைத்தீவின் அரசியல் கலாச்சாரத்தில் அரசியல்வாதிகள் பௌத்த மதத்தை ஆக்கிரமிப்பின் கருவியாக மாற்றிவிட்டார்கள். இத்தகைய பொருள்படக்கூறின், இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை என்பதே தீவின் பௌத்தமத சந்நியாசிகளும் அரசியல்வாதிகளும் புத்தபகவானின் போதனைகளைப் பின்பற்றத் தவறியதன் விளைவே. புத்தபகவான் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக எழுச்சிபெற்றவர். ஆனால் இலங்கைத் தீவின் மகா சங்கத்துக்குள்ளேயே சாதி அடுக்குகள் உண்டு. அதைவிடக் கொடுமையான விடயம் என்னவென்றால், பௌத்த பிக்குகள் அணியும் காவி உடையிலும் சாதி உண்டு என்பது தான். அதாவது சாதி ரீதியாக உயர்ந்த நிலைகளில் இருக்கும் பிரிவுகளைச் சேர்ந்த பிக்குகள் இந்துச் சந்நியாசிகள் அணிவதுபோன்ற காவி உடையை அணிவார்கள். ஆனால் ஒடுக்கப்பட்ட சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் செங்கட்டி நிறக் காவியை அணிவார்கள்.

சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய அம்பேத்கர் பின்னாளில் பௌத்த மதத்திற்கு மதம் மாறினார். அவர் இலங்கைத்தீவின் மகா சங்கத்தினின் விருந்தாளியாக இங்கு வந்து தங்கியிருந்த காலகட்டத்தில் மகா சங்கத்துக்குள் சாதி ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைக் கண்டு, மனம் நொந்து நாடு திரும்பினார். காவிக்குள் சாதியை வைத்திருக்கும் சந்நியாசிகள், அரசியலில் என்ன செய்வார்கள்? புத்தர் சிலையை ஒரு முன்தடுப்பாக, கவசமாகப் பயன்படுத்துவார்கள்தானே? ஆனால் அது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை நிர்வாணமாக்கியிருக்கிறது. இந்த அரசாங்கம் தன்னை முன்னைய மேட்டுக்குடி அரசாங்கங்களில் இருந்தும் வித்தியாசப்படுத்திக் காட்ட முயற்சிக்கிறது. தாங்கள் இனவாதத்துக்கு தலைமை தாங்கவில்லை என்று அது எப்பொழுதும் கூறிக் கொள்கிறது. முன்னைய அரசாங்கங்கள்தான் தேர்தல் தேவைகளுக்காக இனவாதத்தை கிளப்பின. இனவாதத்தைக் கையாண்டன என்று கூறுகிறது. தனக்கும் இனவாதத்துக்கும் சம்பந்தம் இல்லை என்பதுபோல அது காட்டிக்கொள்கிறது. தமிழ்ப் பகுதிகளில் அதற்குக் கிடைத்த எட்டு ஆசனங்களை வைத்து தமிழ் மக்களின் ஆணை தனக்கு உண்டு என்று கூறிக்கொள்கிறது. ஆனால் திருமலை புத்தர் சிலை இந்த அரசாங்கத்தை நிர்வாணமாக்கியிருக்கிறது.

அரசாங்கம் எல்லாவற்றுக்கும் எதிர்க்கட்சிகளைக் குற்றஞ்சாட்டுகிறது. கடந்த ஓராண்டு காலத்துக்கு மேலாக தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள எதிர்க்கட்சிகள் இனவாதத்தைக் கையில் எடுத்து மீண்டும் தாக்கும் நிலைக்கு முன்னேற முயற்சிப்பதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது.

திருகோணமலையில் சம்பந்தப்பட்ட காணியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட ரெஸ்ரோரன்ட் ஒரு ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தருக்குரியது. எனவே இந்த விடயத்தில் எதிர்க்கட்சிகள் நேரடியாகச் சம்பந்தப்படுகின்றன என்று அரசாங்கம் கூறக்கூடியதாக உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை நுகேகொடயில் எதிர்க்கட்சிகள் இணைந்து அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தன. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு உணர்ச்சிகரமான ஆதரவைத் திரட்டும் நோக்கத்தோடு எதிர்க்கட்சிகள் இனவாதத்தைக் கையில் எடுத்ததாக அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது.

கடந்த பல தசாப்த கால இன முரண்பாட்டு அரசியலில், ஆளுங்கட்சி அதன் இனவாதப் பண்பை அடக்கி வாசித்தால் எதிர்க்கட்சிகள் இனவாதத்தை உச்ச நிலைக்கு கொண்டு போவதே இலங்கைத் தீவின் அரசியல் பாரம்பரியம் ஆகும். இப்பொழுதும் அது நடக்கின்றது. ஆனால் அதற்காக, நுகேகொட ஆர்ப்பாட்டத்தில், வடக்கு= கிழக்கு மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்பதை, தமிழ்மக்கள் அரசாங்கத்துக்கு எதிராகத் திரும்ப விரும்பவில்லை என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. மாறாக, தமிழ்மக்கள் எதிர்க் கட்சிகளையும் நம்பவில்லை என்றுதான் எடுத்துக் கொள்ளவேண்டும். திருமலைச் சிலை எதிர்க்கட்சிகளை, குறிப்பாக சஜித் பிரேமதாஸவை அம்பலப்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு வாக்களிக்குமாறு கேட்ட சுமந்திரனை அம்பலப்படுத்தியிருக்கிறது. அருண் ஹேமச்சந்திரவை ராஜினாமாச் செய்யுமாறு கேட்கும் சுமந்திரன், ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை ஆதரிப்பது என்று தான் எடுத்த முடிவுக்குப் பொறுப்பேற்று இப்பொழுது கட்சிப் பொறுப்புகளைத் துறப்பதற்குத் தயாரா?

கடந்த புதன்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்தபோது, இனப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பது தொடர்பாக அவர் தெரிவித்தவற்றை தன்னுடைய'எக்ஸ்' தளத்தில் சுமந்திரன் பதிவிட்டிருந்தார். அந்தப்பதிவின்படி, ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் காலத்தில், நிலைமாறு கால நீதியின் கீழ், உருவாக்கப்பட்ட தீர்வு முன்மொழிவின் இடைக்கால வரைபை முழுமைப்படுத்தும் நோக்கம் அவரிடம் இருப்பது தெரிகிறது. 2021ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து நிலைமாறு கால நீதியை ஒரு 'தோல்வியடைந்த பரிசோதனை' என்று அவர் சொன்னார். அந்தத் தோல்விக்கு அவர் இதுவரை பொறுப்பேற்கவில்லை. இப்பொழுது அந்தத் தோல்வியின் விளைவாக வந்த தீர்வு முன்மொழிவை மேசையில் வைக்க வேண்டும் என்று கேட்கிறாரா?

சட்டவிரோதக் கட்டுமானம் ஒன்றுக்கு எதிரான நடவடிக்கைகளைத் திசை திருப்புவதற்காக, இடையில் கொண்டுவரப்பட்ட ஒரு புத்தர் சிலையின் விடயத்தில், இனவாதிகளுக்குப் பணிந்த ஓர் அரசாங்கம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும்; அரசியற் கைதிகளை முழுமையாக விடுவிக்கும்; ஒரு புதிய யாப்பை குறிப்பாக, தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளும் ஒரு தீர்வை உள்ளடக்கிய யாப்பைக் கொண்டு வரும் என்று எப்படி நம்புவது?

குறிப்பாக அந்த யாப்பு பொதுஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் போது இனவாதத்தைக் கையாள்வதற்கு இந்த அரசாங்கத்தால் முடியும் என்று எப்படி நம்புவது?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தியாகத்தின் அடையாளங்கள்



ஜிந்துஜா விஜயகுமார்

போரின் அலைகள் அடங்கிய பிறகும், அதன் நிழல்கள் இன்னமும் நம் மண்ணில் படிந்து கிடக்கின்றன. அந்த மண்ணின் அடியில் புதைந்திருப்பவை வெறும் உடல்கள் அல்ல. அவை ஒரு தலைமுறையின் கனவுகள், தியாகங்கள், நம்பிக்கைகள். இவற்றின் அடையாளமாக நம் கண்முன் நிற்கின்றவையே துயிலும் இல்லங்கள்.

இந்தத் துயிலும் இல்லங்கள் வெறும் கல்லறைகள் அல்ல; அவை ஒரு வரலாற்றின் சாட்சியங்களாகும். ஒவ்வொரு கல்லறைகளின் பின்னாலும் ஒரு உயிரின் சத்தம் உறங்கிக்கொண்டிருக்கிறது. அவர்கள் எழுப்பிய குரல், "நாம் யார்?", "எதற்காக வாழ்கிறோம்?" என்ற கேள்விகளாக இன்னும் சமூகத்தின் மனதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அந்த நினைவுகள், ஒருபுறம் துயரத்தை நினைவூட்டுகின்றன; மறுபுறம், அமைதியின் மதிப்பை உணர்த்துகின்றன.

ஆனால் இன்று நாம் அந்த நினைவுகளின் பெறுமதிகளை உணர்ந்து நினைவுகூருகிறோமா, அல்லது வெறும் ஆண்டுதோறும் நிகழும் சடங்காக நினைவுகூருகிறோமா? என்ற கேள்வி அனைவரின் மனங்களிலும் எழுகின்றது. நினைவுகூருதல் என்பது வெறுப்பை வளர்ப்பதற்காக அல்ல; அது வலிகளின் வழியாகப் பிறந்த அமைதியைப் புரிந்துகொள்வதற்காக என்பதை அனைவரும் உணரவேண்டும்.

ஆனால் இன்றைய சமூகத்தின் சில அணுகுமுறைகள், அந்த உண்மையான நோக்கத்திலிருந்து விலகிவிட்டன என்பதே வேதனைக்குரிய விடயமாகும். துயிலும் இல்லங்கள் ஒரு அரசியல் அடையாளமாக மட்டும் அல்ல; அவை ஒரு சமூகத்தின் தன்னிலை உணர்வின் வெளிப்பாடாகவும் விளங்குகின்றன.

இன்றைய இளைய தலைமுறை, தொலைபேசியின் திரையில் உலகைக் காண்கிறது; ஆனால் துயிலும் இல்லங்கள் காட்டும் உலகம் மௌனமான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. அங்கு தொழிநுட்ப வசதிகள் இல்லை, ஆனால் மனிதத்தின் உணர்வு நிறைந்திருக்கிறது. அவற்றை காணும் ஒவ்வொரு இளைய சமுதாயத்தின் மனமும், "நான் இன்று அமைதியாக வாழ்வது யாரின் தியாகத்தினால்?" என்பதை உணர வேண்டியது அவசியமாகும்.


நாகரிகத்தின் மோகத்தினால் போரின் உண்மைச்சுவடுகளை உணர்ந்து கொள்ளும் திறனை நாம் இழந்துவிட்டோம். இதற்கான முக்கியமான காரணம் இன்றைய இளைஞர்கள், போரை நேரில் அனுபவிக்காத ஒரு தலைமுறை என்பதாகும். அவர்களுக்குப் போரின் கதைகள், புத்தகங்களிலும் ஆவணப்படுத்தல்களிலும் மட்டுமே காணப்படும் ஒரு நிகழ்வாகவே உள்ளது. ஆனால் அதே நேரத்தில், அந்தப் போரின் நீங்காத ஞாபகச்சுவடுகள் இன்னும் குடும்பங்களின் நினைவுகளிலும் சமூகப் பழக்கங்களிலும் உயிரோடு இருக்கின்றன.

இந்தத் தலைமுறை, அந்த நினைவுகளைப் புரிந்துகொள்வதில் ஆர்வமின்மையாக உள்ளது. தற்காலத்தில் அமைதி என்னும் சொல்லை இன்றைய தலைமுறையினர் அனுபவிக்கின்றனர்; ஆனால் அதன் விலை என்ன என்பதை அவர்கள் உணரவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

இது சமூகத்திற்குள் ஒரு மனப்பாங்கு வெற்றிடத்தை உருவாக்குகிறது. நினைவுகள் வெறும் நிகழ்வாக மாறி, அதன் பின்புல சிந்தனைகள் மற்றும் தியாகங்கள் மறைந்து விடுகின்றன. இந்த நினைவுகள் ஒரு நாட்டின் வரலாற்று அடையாளங்களாகும். அவற்றை அழித்தல் என்பது ஒரு தலைமுறையின் வரலாற்றை மறைப்பதாகும். எனவே, நினைவுகளைப் பாதுகாப்பது என்பது வெறும் நினைவுச்சின்னங்களை பராமரிப்பதல்ல; அது ஒரு உணர்வுபூர்வமான சிந்தனைப் பணியாகும். நம் தியாகிகளின் வலிகளின் வழியாக வளர்ந்த மனித நேயத்தைப் பரப்பும் கடமையாகும். அரசாங்கம், கல்வி அமைப்புகள், ஊடகங்கள் ஆகியவை இதற்கு முக்கியமான பங்காற்ற வேண்டும்.

போரின் வரலாற்றை சமநிலையான பார்வையில் கற்பித்தல், மறுபுறம், நினைவுகள் வழியாக மனித மதிப்புகளை வளர்த்தல் போன்ற நடவடிக்கைகள் தற்காலத்தில் மிக அவசியம். நினைவுகள் ஒரு தலைமுறையின் சுவடு என்பதையும் தாண்டி, அவை நம் கடந்தகாலத்தின் குரலும், எதிர்காலத்தின் ஆவணங்களுமாகும். அவற்றை வெறுப்பின் கருவியாக அல்லாமல், அமைதியின் வழிகாட்டியாக நாம் அணுக வேண்டும்.

போரில் உயிரிழந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அனைவரும் மனித குலத்தின் உயிர்கள் என்பதை உணர்ந்து அவர்களை நினைவுகூரும் போது, "யார் வென்றார்?" என்பதைப் பார்க்காமல்,"இனி யாரையும் இழக்கக்கூடாது" என்பதையே மனதில் கொள்ள வேண்டும். நினைவுகள் நம்மைச் சிதறவிடாமல், சேர்க்கும் சக்தியாக மாறட்டும். அதுவே நம் மூத்த தலைமுறையின் உண்மையான தியாகத்தின் அடையாளமாகவும், நம் காலத்தின் பொறுப்பாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை...



## மண்ணில் மறையாத வீரத்தின் சுவாசம்

இன்றும்
மண்ணில் ஒரு வாசனை உண்டு
உதிரத்தின் வெப்பம் காற்றோடு கலந்து
அமைதியை கத்தி கிழித்த காலத்தின் சுவடு அது.

வானம் இன்று சற்று செம்போதி,
சூரியன் கூட தலை குனிகிறான்,
இரத்தத்தில் எழுதப்பட்ட சத்தியத்துக்கு
ஒளி கூட வணக்கம் செலுத்துகிறது.

வீரம்
கத்தி பிடித்த கையில்தான் இல்லை
தன் உயிரை ஒரு அர்த்தம் ஆக்க முடிந்த
இதயத்தின் உள் சூழலில் உள்ளது.

அம்மா
தன் மார்பின் உள்ளே
ஒரு போர்க் குரலை மறைத்து நிற்கிறாள்
அது அழுகை அல்ல
அது பெருமையின் வெடிப்பு முன் நிற்கும்
அமைதியின் துடிப்பு.

மண்ணின் மேல் பதித்த காலடிகள்
இப்போது வேர் போல் ஆழமாகிப் போயின
நாம் நடப்பது
அவர்கள் விட்டுச் சென்ற பாதையில்தான்
ஆனால் நிழல் மட்டும் நமக்கு சொந்தம்,
பாதை அவர்களின் சொத்து.

நம் மொழி கூட
இன்று சற்றுக் கரகரப்பாக ஒலிக்கிறது,
ஏனென்றால்
அதில் வரிகளுக்கு இடையே
கரைந்த இரத்தத்தின் உப்பு கலந்திருக்கிறது.

மாவீரர்
இது புகழின் பெயரல்ல
இது ஒரு சுவாசம்.
உயிர் துடிக்கும்போது
உள்ளே எழும் வலிமையின்
அமைதியான முழக்கம்.


இன்று
மலர்கள் விழவில்லை
மண்ணே மலர்ந்திருக்கிறது.

நடராசா கோபிராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்







ஹரணிகா பிரதீபன்
தரம்- 3D
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை




பி.கவிப்பிரியன்
திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்லம்.



ஹரணிகா பிரதீபன்
தரம்- 3D
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை



ஜெ.நேசிகா
தரம்- 3
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.



அ.அஸ்விதா
தரம்- 7D
யா/ இந்து மகளிர் கல்லூரி

## அறிந்துகொள்வோம்

இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர், **முசோலினி.**

சூரியக்குடும்பத்தைக் கண்டறிந்தவர், **கோபர் நிக்கஸ்.**

சிங்கப்பூரின் முந்தைய பெயர் - **டெமாஸெக்**

உலகின் வெண்தங்கம் **பருத்தி.**

குருதிச் சிவப்பணுக்களின் ஆயுட்காலம், **120 நாள்கள்.**

புத்தர் பிறந்த இடம் - **லும்பினி.**

எறும்பின் ஆயுட்காலம் - **10 ஆண்டுகள்**

இளம்வயதில் ஓவியராக இருந்தவர்- **ஹிட்லர்**

பாம்பு இல்லாத தீவு- **ஹவாய்**



# அடக்கம் அவசியம்

கோவில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் பட்டை தீட்டிக் கொண்டு சுத்தமாக வந்துகொண்டிருந்தது.

ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி வாலை ஆட்டிக்கொண்டே வந்தது.

யானை ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழிவிட்டது.

அந்தப் பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றியிடம், "பார்த்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்துவிட்டது!" என்று சொல்லிச் சிரித்தது.

அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை, "அப்படியா, நீ பயந்து விட்டாயா?" என்று கேட்டது.

அதற்குக் கோவில் யானை,

"நான் தவறி இடறிவிட்டால் பன்றி நசுங்கிவிடும். மேலும் நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என் மேல் விழுந்து நானும் அசுத்தமாகி விடுவேன். இந்தக் காரணங்களால், நான் ஒதுங்கிக்கொண்டேன்."

தன் பலம், பலவீனம் தெரிந்தவர்கள் அடக்கத்தில் சிறந்தவர்களாக இருப் பார்கள்.


## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.


அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## வழிகாட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவி

## போரின் கவிதை 38

என் தோழர்களே!
இருளின் நடுவே என் மூச்சு
இன்னும் நடுங்குகிறது.
நான்...
போராட்டம் முழுவதும் வாழ்ந்தவள்
வரலாறும் வஞ்சகமும் அறிந்தவள்
உங்கள் துன்பங்களை சுவாசித்தவள்.
நீங்கள் விழுந்த நொடிகள் நீண்டன..
மறக்கமுடியாமல் குற்றமிழைத்தவளாக
தினமும் மனம் அல்லப்படுகிறது.

தாய்மண்ணில் உக்கிப்போன
காற்றில் கருகிப்போன
உங்கள் கனவுகளின் வாசம்
இன்னும் மனவெளிகளுக்குள்
மண் நிரப்புகிறது.
எம் குரலில் எழுந்த நெருப்பு
பலர் நெஞ்சங்களுக்குள்
குற்ற உணர்வாக எரிகின்றன...
நான் மட்டும் ஏன் உயிரோடு?..
பயங்கரமான நினைவுகளைச் சுமந்து
தனித்து வாழ்தல் என்பது
ஆயுள்தண்டனை

நாம் தோற்றோம்
ஆனால் நீங்கள் தோற்கவில்லை.
உங்களுடைய இறுதிச் சுவாசமே
ஒரு போரின் கடைசிப் பாடல் போல
இன்றும் என் காதில் ஒலிக்கிறது.

உங்களது கைகளில்
நான் பார்த்த தைரியம்
வியந்து முடியவில்லை...
அதை நான் சுமந்துகொண்டே நடக்கிறேன்.

காட்டின் பிடியிலிருந்து
நான் உயிருடன் வந்ததை
வெற்றி எனக் கொள்ள முடியவில்லை
ஏனெனில்
உங்களை இழந்த துக்கத்தால்
என் ஒவ்வொரு இரவும் அழுகிறது

நீங்கள் விழுந்த இடத்தில்
நான் நிற்கிறேன்
ஆனால் என் நிழல் கூட
உங்களைப் போன்ற உயரமில்லை.

நான் மட்டும் உயிரோடு
ஆனால் நீங்கள் எல்லாம்
என்னுள் உயிராக இருக்கிறீர்கள்

நான் களத்தில் நிற்கவில்லை.
ஒரு விடுதலைப் போராட்டத்தின் குரலாக
கால்களை இழந்ததால் எனக்கான சலுகை
எதிரொலிகளை பதிவு செய்தவள் தான்.
அதனால் தான்
அந்த இரத்தம் கசிந்த போர்க்களத்தில்
இருந்து

என் உயிர் தப்பித்தது.
ஆனால் நீங்கள்
களத்தில் நின்று களப்பலியானவர்கள்!
உங்கள் மார்பில் பதிந்த தைரியத்தை
எங்கு எழுதித் தீர்ப்பது?

உங்கள் ஒவ்வொருவரின் பிறப்பும்
ஒரு வீட்டு விழாவைப் போல,
ஒரு தாயின் மார்புக்குள்,

பொக்கிசம் போல...
கூடிக் கொண்டாடி இவ்வுலகுக்கு
வந்து சேர்ந்தீர்கள்....
ஆனால் உங்கள் இறப்புகள்
எத்தனை கொடுமையாக,
அமைதியில்லாமல்
வன்முறை நிறைந்ததாக...
வானமும் பூமியும் அழுது சொரிந்து
அழுவதற்கு மனிதரில்லா மனிதர்களாக...

இறந்த பொழுதுகளைக் கணக்கிட
முடியாமல்
உடல்களை எடுக்காமல்...
உருவம் தெரியாமல்....
நடந்ததைச் சொல்ல முடியாமல்....
உங்கள் மரணங்கள்
கொடிய நினைவுகளாக...
குற்றுயிரான வாழ்வுகளோடு இணைந்த
தாக
போய் முடிந்தன...
கணக்குவைக்கப்படாத மரணங்களும்
அடையாளப்படுத்த முடியாத மரணங்க
ளும்
சாகும் வரை மறக்கமுடியாத நினைவுகள்.

நாங்கள் பலர் உயிரோடு
நடைப்பிணங்களாகவும்..
படுக்கைப்பிணங்களாகவும்
இதயம் சிதைந்த நிலையில்
வாழ்கிறோம்.

உங்கள் குரல்கள், உங்கள் சிரிப்புகள்,
உங்கள் கனவுகள்
அனைத்தும் இன்னும் என் காதுகளில்
சிதறிய குண்டுகளின் சத்தமாக ஒலிக்கின்
றன.

நான் சுமக்கிறேன் இப்போது
என் உயிரை மட்டும் அல்ல
இந்த இலட்சம் உயிர்களையும்.

ஏனெனில் நீங்கள் விழுந்த இடத்தில்
நின்று பார்க்கும் போது தான்
புலப்படுகிறது....
நாம் தொலைத்தவை
ஒரு வரலாற்றில்
போர் பலிகொண்ட சூல்கள்!
உங்கள் மரணங்கள் தோல்வியில்லை
அது காலம் விழுங்கிக்கொண்ட கதைகள்
மீண்டும் பிறந்து உங்கள் வாழ்வு தொட
ரும்.

நீங்கள் புதைந்த இடத்தில்
மண் மூச்சு விடுகிறது....
எம்மைத் தட்டிச் செல்லும் காற்று..
உங்கள் ஸ்பரிசம் என்று தெரிகிறது...

எம்மைக் காப்பாற்ற
நீங்கள் மரணித்தீர்கள்..
நம்பிக்கையின் பேரில் சமாதானத்தை
உச்சரித்தீர்கள்..
நீங்கள் பிடிபட்டது தோல்விக்காகவல்ல,
உள்ளத்தின் உத்தமத்திற்காக.
ஆனால் கொடுத்த அவமானம்
உங்கள் உயிரைத் தாங்கவில்லை
அதை அழிக்க சுயமரணம்
ஆயுதமானது அகிம்சையுமானது...
உங்களுள் பலரின் [illegible]

காதல் கதைகள்
இன்னும் மண்ணின் உள்ளே
உறங்கிக் கொண்டிருக்கின்றன.
அதை யாரும் கேட்கவில்லை,
நீங்களே சொல்ல வந்த போதெல்லாம்
உயிரைக் காப்பற்ற ஓடிக்கொண்டிருந்தீர்கள்.
வாழ ஆசைப்பட்டவர்கள் இருந்தார்கள்
மீண்டும் வீட்டிற்குள் செல்லவேண்டும் ....
உங்கள் உள்ளங்கள் உச்சரித்தன.

எனக்குத்தெரியும்.....
போர்க்களத்தில் நின்று தாயை நினைத்து
கண்ணீர் விட்ட
தோழர்களைத் தேற்றியிருக்கிறேன்.
போர் முடிந்தால் வீடு திரும்பலாம்
என்ற கனவுகள் அதிகம்...
தங்கையுடன் விளையாட...
அண்ணனுடன் கொண்டாட
அம்மாவின் குழை சோற்றுக்கு ஆசைப்பட்டு
காதலியின் நினைவுகளில் கசங்கி...
போர்க்களத்தின் உயிர்கள்
இந்த உண்மைகளோடு
போரிட்டுக்கொண்டன.

விடுதலை என்பது வீட்டுக்குப்போவது
அம்மாவைப்பார்ப்பது.....
ஆனால் ..எந்த ஆசைகளும்
அடைந்து கொள்ளாமல்
உங்கள் உயிர்கள் அடங்கின...
போர் உங்களை முடித்து வைத்து
தன்னையும் முடித்துக் கொண்டது.
உங்கள் உடலின் மீது விழுந்த
ஒவ்வொரு குண்டும்
வரலாற்றின் பிழையாகவே நான் பார்க்கிறேன்

நான் தப்பி வந்தேன்
நான் வாழ்கிறேன் என்ற உண்மை கூட
சில நேரங்களில் குற்றம்போல்
தொண்டையை நெருக்குகிறது.
நூறு ஆயிரமாக இலட்சமாக
அனைத்து வாழ்வும் அழிந்து போயின..
ஒற்றை மரங்களாக , பட்ட மரங்களாக
வானம் பார்த்த பூமியாக
உங்கள் வரவுக்குப் பார்த்திருக்கின்றன..
நீங்கள் இல்லை என்பது தெரியாமல்

நம்ப முடியாமல்...
மறுத்துக் கொண்டு இங்கு பலர் வாழ்வு
வெறுப்பில் போகிறது..
உங்களை அழைக்க என் குரல் முயன்றாலும்
உங்களது பெயர்களைத் தெரிந்த ஒரே
சாட்சியாக
காற்று மட்டுமே பதிலளிக்கிறது.

நீங்கள் காத்திருந்த நேரம்
சூரியன் கூட மறந்த நேரமாய்
உங்கள் இதயம் துடித்ததே
அந்த நம்பிக்கைக்காக.
ஆனால் அந்தத் துடிப்பு
இப்போது இந்த மண்ணின் கீழே
மௌனமாக உறங்குகிறது.

நான் நினைத்துப்பார்க்கின்றேன்
நீங்கள் அங்கே கைகளை இணைத்து
கண்ணீரை மறைத்து
வருவார்கள் காப்பாற்ற வருவார்கள்
என்று சொல்லிக்கொண்டிருப்பது
இன்றும் எனக்கு கேட்கிறது.

உங்கள் சுவாசமே
அந்த நம்பிக்கையில் தங்கியிருந்த
போது
உங்கள் உயிர்
அந்த வெறுமையில் கரைந்தது.
நீங்கள் காத்தது வாழ்க்கைக்காக,
ஆனால் வந்தது மரணம் மட்டுமே!

என் தோழர்களே
நான் இன்று உயிரோடு இருந்தாலும்
உங்கள் இறுதி நொடியின்
அந்த ஏமாற்றத்தின் சத்தம்
அது எனக்குள் என் எந்த இரவையும்
தூங்க விடவில்லை.

நீங்கள் தேடியவர்கள் வரவில்லை
ஆனால் உங்கள் நினைவுகளின் முன்
ஒவ்வொரு நாளும்
நான் மண்டியிடுகிறேன்.

போரின் புழுதி
உங்கள் முகங்களை மூடி விட்டது

நான் என்ன செய்தேன்?
நான் துப்பாக்கி எடுக்கவில்லை

நான் களத்தில் ஓடவில்லை
தொலைக்காட்சியில்
உங்கள் கதையைப் பதிவு செய்தேன்.
அதனால் தான் நான் உயிர் தப்பினேன்
அது எனக்கான வெற்றி அல்ல,
என்னை எரிக்கும் குற்றம்.

எல்லாம் மாறிவிட்டன...
மறக்கப்பழகிவிட்டோம்
வஞ்சனைகளையும்..துரோகத்தையும்
காலம் எளிதாகக் கடந்து செல்கிறது...
உங்கள் மரணங்களுக்கு
ஆண்டு தோறும் நினைவேந்தல்
அத்தோடு எல்லாம் முடிந்ததா?
அடையாளம் காணாத
பல முகங்களைத் தேடிஅலையும்
உங்கள் உறவுகளுக்கு காலம்
என்ன பதிலைக் கொடுக்கப்போகிறது?
கண்ணீரோடு கலங்கிநிற்கும்

உங்கள் எச்சங்களுக்கும்
வாழ்வின் மிச்சங்களுக்கும்
நீங்கள் எதைக்கொண்டு வந்து
காற்றின் மூலமென்றாலும்
சொல்லப் பார்த்திருக்கிறீர்கள்?
நானும் காத்திருக்கிறேன்.

ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்ஸ் அப் வாத்தியும் பேஸ்புக் பேத்தியும்



**பேத்தி :** தாத்தா! இண்டைக்கு அம்மாவோடை படிச்சவவின்ரை மகனுக்குக் கலியாணம். அவா அதுக்குப் போட்டா. மத்தியானந்தான் வருவா. காலமை நான் சும்மாதான் இருப்பன். பின்னேரம் கிளாஸ் இருக்கு. என்னெண்டாலும் இப்ப கேக்கிறதைக் கேளுங்கோ. பிறகு சரிவராது.

**தாத்தா :** அப்பப்ப உந்த வட்ஸ் அப் குறூப்பிகளில வாறதைப் பாக்கிறன். படிக்கிறன். ஆனால் எல்லாம் அதிலை வாறதில்லை. செய்தியள் மாறிமாறித்தான் வருகுது. பேஸ்புக்கிலை எல்லாம் பச்சை பச்சையாப் போடினமாம். அதிலை எங்களுக்குப் பிரயோசனமான ஏதாவது இருந்தால் சொல்லு.

**பேத்தி :** நீங்கள் அடிக்கடி குறைபடுகிற ஒண்டைப் பற்றி வடக்கு மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு ஒரு செய்தியை வெளியிட்டிருக்கு. வடக்கு மாகாணத்தில் நூலக சேவைகள் பணியகம் ஒண்டு இல்லை எண்டு அடிக்கடி சொல்லுறனியள். இப்ப அது வரப்போகுதாம். அது தொடர்பான ஒரு கலந்துரையாடல் வட மாகாண ஆளுநர் செயலகத்திலை போன வெள்ளிக்கிழமை காலமை நடைபெற்றிருக்காம். தேசிய நூலக மற்றும் ஆவணவாக்கல் சேவைகள் சபைப் பணிப்பாளர் நாயகம் தலைமையிலை ஒரு குழு வந்து ஆளுநரைச் சந்திச்சிருக்கினமாம். அந்த யோசனையை ஆளுநர் வரவேற்று அதுக்குத் தேவையான ஒத்துழைப்புகளைத் தான் செய்யிறதா உறுதியளிச்சிருக்கிறாராம்.

**தாத்தா :** அப்ப வடக்கிலை நூலக சேவைகள் பணியகம் ஒண்டு வரப்போகுது. என்ன? முதலிலை ஆளுநருக்குச் சொல்ல வேணும் புதிசா வாற நூலக சேவைகள் பணியகத்தின்ரை காரியாலயத்தைத் தயவுசெய்து யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்குள்ளை கொண்டு போய்த் தாட்டுப் போடாதையுங்கோ எண்டு. ஏனெண்டால் இண்டைக்கு நேற்றில்லை. நான் படிக்கிற காலந்தொட்டு நூல்நிலையத்துக்குப் போய் வாறன். நேற்றைக்கும் போனனான். அது இப்ப முந்தினமாதிரி இல்லை. அதுக்குள்ளை ஆயிரம் குளறுபடிகள் இருக்கு எண்டு சனம் கதைக்கிது. வேறை ஒண்டும் இல்லை அதுக்குள்ளை இருக்கிற நிர்வாக அதிகாரிகளிலைதான் பிசகாம். அவையளுக்கிடையிலை இருக்கிற பிணக்குகளை வெட்டினால்தான் நூலகம் வடிவா இயங்கும் எண்டு சொல்லிச்சினம். அதோடை முன்னம் எரிச்சதோடை விட்டிருந்தாலும் பரவாயில்லை. எரிச்சுப் போட்டாங்கள் எண்டு பேசாமல் இருக்கலாம். இது அதைவிட்டிட்டு திறந்து வைச்சுக் கொண்டு தாங்கள் நினைச்சதைச் செய்யினம். அது மக்களுக்குச் சேவைசெய்யிற ஒரு நிறுவனம் எண்டதைப் பற்றிச் சிந்தனையே அவையிட்டை இல்லை. அதென்ன திங்கட்கிழமையிலை பூட்டிறது?

ஒரு நூலகம் எப்படி இருக்க வேணும்? என்னெண்டு இயங்க வேணும்? நூலகத்துக்கும் வாசகர்களுக்கும் உரிய தொடர்பு என்ன? சமூகத்துக்கு நூலகம் எப்பிடி முக்கியமானது? எந்தவகையிலை உதவுது? அதுக்கு ஒரு வாசகர் வட்டம் ஏன் தேவை? வாசிப்பை ஊக்குவிக்க என்ன செய்ய வேணும்? எண்டு ஒரு கோதாரியும் தெரியாத ஆக்களை வைச்சுக் கொண்டு சனத்துக்கு எப்பிடி நல்ல சேவையைக் குடுக்கலாம்? சொல்லு பாப்பம். அவை தங்களுக்கை நீயோ நானோ எண்டு குத்துவெட்டு, குடும்பிச் சண்டை. நீபெரிசோ? நான் பெரிசோ? உன்ரை சொல்லை நான் கேக்கிறதோ? எண்டு கொழுத்தாடு பிடிக்கினமாம். அவை யாரி பாக்கிறதுக்கு மக்களின்ரை பொதுச் சொத்தையே பாவிக்க வேணும்? கவர்னரிட்டை முதலிலை அதைச் சீராக்கச் சொல்ல வேணும். அதுக்கை இருக்கிற கோடரிக் காம்புகளை முதலிலை வெளியாலை அனுப்ப வேணும். அனுப்பிப்போட்டு அவைக்குப் பதிலா ஒரு நூலகத்தை எப்பிடிப் பொதுமக்களுக்கானதாக நடத்த வேண்டும் எண்டு தெரிஞ்சவையளைப் போடச் சொல்ல வேணும். சரியான ஒரு ஆலோசனைக் குழுவை அமைக்கச் சொல்ல வேணும்.

**பேத்தி :** ஓம் தாத்தா! எங்கடை 'யுனியிலை' இருந்து அங்கை பிள்ளையள் படிக்கப் போறவை. அவையும் நீங்கள் சொன்னமாதிரிச் சொன்னவை. அங்கை வாறவையும் இதைத்தான் சொல்லினமாம். அங்கை உள்ள வேலைகாறர் பிரச்சினை இல்லை. மனேஜ்மென்றிலை இருக்கிற அந்த இரண்டுபேரைத் தான் குறை சொல்லினம்.

**தாத்தா :** இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின்ரை ஒரு புத்தகம் அங்கை வெளியிட்டவை. அதுக்கு நான் போனனான். அந்த மண்டபத்தைப் பாத்தன். அதை அவை சரியாப் பராமரிக்கேல்லை. சில இடத்திலை கழண்டு தொங்குது. அதுவும் அந்த மண்டபம் முனியப்ப கோயிலுக்குக் கிட்ட இருக்கு. நிகழ்ச்சி நடக்கேக்கை ஜன்னல் எல்லாத்தையும் திறந்து விட்டபடி. உள்ளுக்கை ஒரே வாகனச் சத்தம். உப்பிடியான மண்டபத்தை மூடிப்பாவிக்கிறதுதான் நல்லது. அதுக்குரிய ஏசி எல்லாம் இருக்கு. ஆனால் எல்லாம் தூர்ந்து போய்க் கிடக்கு. அதையும் அவை சரியாப் பராமரிக்கிறதில்லைப் போலை? ஏன் கொஞ்ச நாளைக்கு முன்னம் அநுர ஒரு தொகை அதுக்கெண்டு ஒதுக்கினவையெல்லே? அதுக்கு என்ன நடந்தது எண்டு தெரியேல்லை.

**பேத்தி :** உண்மையிலை தாத்தா அதை ஆர்செய்ய வேணும்? ஆற்றை பொறுப்பு?

**தாத்தா :** அது வேறையாற்றை வேலை? யாழ்ப்பாண மாநகரசபைதான். சபைக் கொமிஷனர்தான் பாக்க வேணும். அந்தாளுக்கு இருண்டது விடிஞ்சது தெரியாது. இப்ப புதுச் சபை வந்தாப் பிறகு அவர் எல்லாத்தையும் மேயற்றை தலையிலை போட்டிட்டு இருக்கிறார். ஏதோ தனக்கு ஒரு பொறுப்பும் இல்லை எண்டமாதிரி. மேயர் பாவம். அவாவுக்கும் பெரிசா அனுபவம் இல்லை. அதோடை இவையின்ரை தில்லுமுல்லு அவாவுக்குத் தெரியுமோ தெரியாது. சந்தையிலை சொல்லுறமாதிரி ஒண்டுக்கும் உதவாததுகள் எல்லாம் அந்த நிர்வா கத்துக்குள்ளை இருக்கு. எல்லாம் டம்மிப் பீஸ்.

**பேத்தி :** கேக்க ஆர்வமாத்தானிருக்கு..நான் யுனிக்குப் போக ஆயத்தப்படுத்தவேணும் மிச்சத்தை வந்து கதைப்பம்.

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

பொதுவா எல்லாரும் "எங்கை?" எண்டுதானே கதைக்கிறவை. ஆனால் சிவன்ரை அம்மம்மா "எங்கு?" எண்டுதான் கதைப்பா. அதாவது "எங்கு போகிறாய்?" "சிவா எங்கு?" எண்டுதான் கதைப்பா. இதை வைச்சுச் சிவன் அம்மம்மாவை "எங்கு கிழவி?" எண்டு நக்கலடிப்பான். ஆனால் எனக்கு அவா கதைக்கிறது காதுக்கிதமாயிருக்கும். சிவன்ரை அம்மம்மா சட்டை போட்டுக் குறுக்குக் கட்டாகத்தான் சீலை கட்டிறவா. நல்ல சிவந்த தொக்கை மனிசி. மூக்குத்தியும் குத்தியிருப்பா. கொட்டன் பிடிச்சுத்தான் நடப்பா. நான் கொட்டன் பிடிச்சு நடக்கக் கண்ட முதல் மனிசியும் அவதான்.

சிவனிட்ட ஒரு வித்தியாசமான பழக்கமிருந்தது. ஏதும் கள்ளத்தீன் கிடைச்சால் அதைக் கொண்டுவந்து வைச்சு எங்களுக்கு முன்னாலை காட்டிக் காட்டித் தின்னுவான். ஒரு சொட்டும் தரமாட்டான். அதிலை அவனுக்கொரு சின்னச் சந்தோசம். அப்பிடி அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறதை அம்மம்மா கண்டால் "உதென்னடா எங்கட பரவணிக்கில்லாத பழக்கம் காட்டிக் காட்டித் தின்னுறது? அவனும் வெள்ளணக்கவடிப் பாத்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கும் கொஞ்சத்தைக் குடுத்துத் தின்னன்ரா?" எண்டு என்னைக் காட்டிச் சொல்லுவா. அவனும் அதைக் காதில விழுத்தாமல் தன்ர பாட்டில தின்டுமுடிச்சாப்போலை தான் அந்த இடத்தை விட்டு எழும்புவான்.

55

சிவன்ரை வீட்டுப் பின்வளவில ஒரு கறுத்தக் கொழும்பான் மாமரம் நிண்டது. நல்லாச் சடைச்சு வளந்தாப்போலயும் பெரிசாக் காய்க்கிறேல்ல. அப்பதான் ஆரோ அந்த மரத்தைப் பாத்திட்டு அடிமரத்தைச் சுத்தி உலக்கையால இடிச்சா காய்ச்சுச் சொரியுமெண்டு சொல்லியிருக்கினம். இந்தச் சங்கதி எனக்குத் தெரியாது. ஒருநாள் காலமை நான் சிவன்ரை வீட்டை போகேக்குள்ள அம்மம்மா காலை நீட்டிக்கொண்டிருந்து பாக்கிடிச்சுக் கொண்டிருந்தா. என்னைக் கண்டிட்டு "வா மோனை! உன்னைத்தான் வழிய வழி பாத்துக்கொண்டிருந்தனான் வந்திட்டாய்" எண்டா. "ஏனணை?" எண்டு கேட்டன். "கொஞ்சம் பொறு பாக்கைப் போட்டுட்டு வாறன். ஓரலுவல் கிடக்கு" எண்டு புதிர் போட்டா. பிறகு உரலுக்காலை பாக்கை நோண்டியெடுத்து வாய்க்கை போட்டு உன்னியெழும்பி சாத்தியிருந்த உலக்கையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்னால வரச்சொல்லிக் கையைக் காட்டிப் போட்டு விறுக் விறுக்கெண்டு பின்வளவுக்கை போனா. நானும் அவவுக்குப் பின்னால போனன். அவா கறுத்தக் கொழும்பான் மாமரத்துக்குக் கிட்டப் போய் அடிப்பக்கத்தை உலக்கையால மூசி மூசி இடிக்கத் தொடங்கிட்டா.

எனக்கொண்டும் விளங்கேல்ல. "எணேய்! ஏனணை மாமரத்தை உலக்கையால இடிக்கிறாய்? உனக்கென்ன விசரேயணை?" எண்டு நான் கேட்டன். அதுக்கு அவா "காய்க்காதாம்! பூக்காதாம்! கள்ளனும் கொண்டு ஓடானாம்!" எண்டு சொல்லிப் போட்டு இடிக்கிறதை நிப்பாட்டிப் போட்டு மூச்செறிஞ்சா. பிறகு நிதானமா விசயத்தைச் சொன்னா. "ஏன் எனக்கு முதல்லையே இதைச் சொல்லேல்லை?" எண்டு அவாவிட்டக் கேட்டன். கேக்கிறாளுக்கு முதல்லையே விசயம் தெரிஞ்சால் அது பலிக்காதாம் எண்டு சொன்னா.

அதுக்குப் பிறகு அந்தக் கறுத்தக் கொழும்பான் காய்ச்சுச் சொரிஞ்சுது. தென்னையும் காய்க்காட்டி இப்பிடிச் செய்ய வேணுமெண்டு தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒராள் சொன்னதாகக் கிட்டடியில என்னோட வேலை செய்யிற ஒரு பொடியன் சொன்னவன். வேணுமெண்டால் நீங்களுமொருக்கால் 'ட்றை' பண்ணிப் பாருங்கோவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

## தமிழீழ விடுதலை புலிகளின் முஸ்லிம் மாவீரர் பட்டியல்

**01. லெப். ஜோன்சன்**
(ஜெயா ஜுனைதீன்)
ஓட்டமாவடி, மட்டக்களப்பு
பிறப்பு 22.08.1963
வீரச்சாவு 30.11.1985

**02. வீரவேங்கை ரகீம்**
வீரச்சாவு 08.05.1986

**03. வீரவேங்கை உஸ்மான் கிழங்கு**
(அப்துல்காதர் சாதிக்) யாழ்ப்பாணம்.
பிறப்பு 10.05.1966
வீரச்சாவு 25.08.1986

**04. வீரவேங்கை நசீம் (கஜன்)**
(அப்துல்மானாப் முகமது நசீம்)
மூதூர், திருகோணமலை
பிறப்பு 05.07.1964
வீரச்சாவு 25.07.1986

**05. வீரவேங்கை லத்தீப்**
(முகமது அலியார் முகமது லத்தீப்)
காத்தான்குடி, மட்டக்களப்பு.
பிறப்பு 16.11.1962
வீரச்சாவு 24.12.1986

**06. கப்டன் பாறூக்**
(அகமதுலெப்பை முகமது கனீபா)
அக்கரைப்பற்று, அம்பாறை.
பிறப்பு 12.06.1959
வீரச்சாவு 07.01.1987

**07. கப்டன் குட்டி அல்லது தினேஷ்**
(முகமது அலிபா முகமது ஹசன்)
பேராறு, கந்தளாய், திருகோணமலை.
வீரச்சாவு 28.04.1987

**08. வீரவேங்கை பதூர்தீன் எ குஞ்சான்**
(காலித்தம்பி காதம்பவா)
அக்கரைப்பற்று, அம்பாறை.
பிறப்பு 16.10.1963
வீரச்சாவு 07.06.1987

**09. வீரவேங்கை சலீம்**
வீரச்சாவு 03.07.1987

**10. வீரவேங்கை மருதீன் அல்லது முகமது**
(சந்திரயோகு மருத்தீன்)
உயிர்த்தராசன்குளம், மன்னார்
பிறப்பு 25.10.1965
வீரச்சாவு 15.10.1987

11. வீரவேங்கை நசீர்
(முகமது நசீர்)
காங்கேயனோடை, மட்டக்களப்பு.
பிறப்பு 15.03.1963
வீரச்சாவு 30.12.1987

**12. வீரவேங்கை கலீல்**
(கலீல் ரகுமான்)
தோப்பூர், திருகோணமலை.
வீரச்சாவு 27.04.1988

**13. வீரவேங்கை சாபீர்**
(சரிபுதீன் முகமது சாபீர்)
தியாவெட்டுவான், மட்டக்களப்பு.
வீரச்சாவு 13.05.1988

**14. வீரவேங்கை நகுலன்**
(ஜுனைதீன்)
அட்டாளைச்சேனை, காரைதீவு, அம்பாறை.
வீரச்சாவு 26.06.1988

**15. வீரவேங்கை அகஸ்ரின்**
(சம்சுதீன் அபுல்கசன்)
அக்கரைப்பற்று, அம்பாறை.
பிறப்பு 15.08.1971
வீரச்சாவு 27.10.1988

**16. வீரவேங்கை குமார்**
(சேதுதாவீது காசிம்)
இரத்தினபுரம், கிளிநொச்சி.
வீரச்சாவு 26.11.1988

**17. வீரவேங்கை நசீர்**
(சம்சுதீன் நசீர்)
ஒலுவில், அம்பாறை.
பிறப்பு 19.02.1960
வீரச்சாவு 17.02.1989

**18. வீரவேங்கை கசாலி**
(சேகு முகமது சகாப்தீன்)
ஆலிம்சேனை, மூதூர்,
திருகோணமலை
வீரச்சாவு 23.05.1989

**19. வீரவேங்கை பாறூக்**
(நாகூர்தம்பி பாயிஸ் ஆதாம்லெப்பை)
அக்கரைப்பற்று, அம்பாறை.
பிறப்பு 08.01.1973
வீரச்சாவு 22.06.1989

**20. வீரவேங்கை ஜெமில்**
(ஜெயாத் முகமது உசைதீன்)
ஓட்டமாவடி, மட்டக்களப்பு.
பிறப்பு 28.03.1968
வீரச்சாவு 05.08.1989

**21. வீரவேங்கை ஹசன்**
(ஆதம்பாவா ஹசன்)
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு 05.11.1989

**22) வீரவேங்கை அஸ்வர்**
(ஜபார் ஜாபீர்)
அட்டாளைச்சேனை, அம்பாறை.
வீரச்சாவு 06.12.1989

**23) வீரவேங்கை சியாத்**
(மீராசாகிபு காலிதீன்)
சாய்ந்தமருது, அம்பாறை.
பிறப்பு 18.08.1972
வீரச்சாவு 06.12.1989

**24. வீரவேங்கை ஆதம்**
(எஸ்.எம். ஆதம்பாவா)
சாய்ந்தமருது, அம்பாறை.
பிறப்பு 21.12.1967
வீரச்சாவு 03.01.1990

**25. 2ஆம் லெப். சாந்தன்**
(நைனா முகைதீன் நியாஸ்)
நிலாவெளி, திருகோணமலை.
பிறப்பு 17.05.1972
வீரச்சாவு 06.02.1990

**26. வீரவேங்கை அலெக்ஸ்**
(அகமது றியாஸ்)
மருதமுனை, நீலாவணை, மட்டக்களப்பு.
பிறப்பு 23.01.1970
வீரச்சாவு 04.05.1990

**26. வீரவேங்கை சந்தர் அல்லது சுந்தர்**
(அகமது லெப்பை செப்லாதீன்)
வேப்பானைச்சேனை, அம்பாறை.
பிறப்பு 25.02.1973
வீரச்சாவு 25.05.1990

**27. வீரவேங்கை கமால்**
மட்டக்களப்பு
வீரச்சாவு
07.06.1990

**28. வீரவேங்கை பர்ஸாத்**
செட்டிக்குளம், வவுனியா
வீரச்சாவு 10.06.1990

**29. வீரவேங்கை கபூர்**
(முகமது அலியார் முகமது சலீம்)
காங்கேயனோடை, மட்டக்களப்பு.
வீரச்சாவு 11.06.1990

**30. வீரவேங்கை தாகீர்**
(முகைதீன்பாவா அன்சார்)
திருகோணமடு, பொலநறுவை.
பிறப்பு 29.04.1972
வீரச்சாவு 11.06.1990

**31. வீரவேங்கை அன்வர்**
வீரச்சாவு 15.06.1990

**32. வீரவேங்கை குபீர்**
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு 15.06.1990

**33. வீரவேங்கை தௌவீக்**
(இஸ்மாயில்)
ஓட்டமாவடி, மட்டக்களப்பு.
வீரச்சாவு 12.06.1990

**34. லெப். ஜெமில்**
(கரீம் முஸ்தபா)
ஓட்டமாவடி, மட்டக்களப்பு.
வீரச்சாவு 12.06.1990

**35. வீரவேங்கை ஜிவ்றி**
(முகம்மது இலியாஸ்)
4ஆம் வட்டாரம், மீராவோடை,
வாழைச்சேனை, மட்டக்களப்பு.
பிறப்பு 05.03.1974
வீரச்சாவு 13.06.1990

**36. வீரவேங்கை தர்சன்**
(அப்துல்காதர் சம்சி)
வீரச்சாவு 13.06.1990

**37. வீரவேங்கை அர்ச்சுன்**
ஓட்டமாவடி, மட்டக்களப்பு.
வீரச்சாவு 14.06.1990

**38. வீரவேங்கை கலையன்**
(கச்சுமுகமது அபுல்கசன்)
முதலாம் வட்டாரம், புல்மோட்டை,
திருகோணமலை.
வீரச்சாவு 14.06.1990

**39. வீரவேங்கை ராவ்**
(முகமது ரவீக்)
பொத்துவில், அம்பாறை.
வீரச்சாவு 15.06.1990

**40. வீரவேங்கை பர்சான்**
(அப்துல்காதர் சம்சுதீன்)
காக்கையன்குளம், வவுனியா
பிறப்பு 04.05.1969
வீரச்சாவு 15.06.1990

**41. வீரவேங்கை ஜெகன்**
(ஆப்தீன் முகமது யூசுப்)
குச்சவெளி, திருகோணமலை.
பிறப்பு 08.04.1972
வீரச்சாவு 15.06.1990

**42. வீரவேங்கை இராமன்**
(மாப்பிள்ளை லெப்பை அல்வின்)
இறக்காமம், அம்பாறை.
வீரச்சாவு 16.06.1990

**43. வீரவேங்கை நியாஸ்**
மூதூர், திருகோணமலை.
வீரச்சாவு 17.06.1990

**44. வீரவேங்கை மஜீத்**
(முகமது இஸ்காக் சுப்சேக்அலி)
மீராவோடை, மட்டக்களப்பு.
வீரச்சாவு 18.06.1990

**45. வீரவேங்கை ஜின்னா**
(லெப்பைதம்பி செய்னூர்)
ஓட்டமாவடி, மட்டக்களப்பு.
பிறப்பு 20.10.1970
வீரச்சாவு 19.06.1990

**46. வீரவேங்கை டானியல்**
(ஹனீபா முகமது ராசீக்)
திருகோணமலை.
பிறப்பு 23.06.1970
வீரச்சாவு 22.06.1990

**47. வீரவேங்கை டானியல்**
(ஹனீபா முகமது ராசீக்)
திருகோணமலை.
பிறப்பு 23.06.1970
வீரச்சாவு 22.06.1990

**48. வீரவேங்கை கனியா**
(அபுசாலி புகாரி)
அக்கரைப்பற்று, அம்பாறை.
வீரச்சாவு 15.07.1990

**49. வீரவேங்கை நிர்மல்**
(அப்துல் நசார்)
புடவைக்கட்டு, திருகோணமலை.
பிறப்பு பிறப்பு 19.01.1972
வீரச்சாவு 27.07.1990

**50. வீரவேங்கை ஜலீம்**
(முகமது இஸ்மாயில் மன்சூர்)
ஏறாவூர், மட்டக்களப்பு.
வீரச்சாவு 01.09.1990

**51. லெப். ராஜிவ் அல்லது ரகீம்**
அல்லது நஜீம்
(காசிம் துலானி)
பட்டாணிச்சூர், புளியங்குளம்,
வவுனியா
வீரச்சாவு 15.09.1990

**52. லெப் அருள்**
(யூசப் ஜாசிர்)
உப்புக்குளம், வவுனியா
பிறப்பு 14.05.1975
வீரச்சாவு 05.11.1995

**53. கப்டன் நசீர்**
சாளம்பைக்குளம், வவுனியா
வீரச்சாவு நவம்பர் 1990

**54. லெப். ஈழநாதன் / ஈழமாறன்**
(காதர்முகைதீன் சருதீன்)
ஒட்டறுத்தகுளம், வவுனிக்குளம்,
முல்லைத்தீவு
பிறப்பு 01.10.1978
வீரச்சாவு 07.04.1998

**55.வீரவேங்கை வசந்தி**
(அப்துல்கரீம் கற்பகரூபவதி)
முள்ளியான், கட்டைக்காடு,
யாழ்ப்பாணம்.
பிறப்பு 06.05.1978
வீரச்சாவு 26.06.1999

**56. வீரவேங்கை தமிழ்மாறன்**
(அப்துல் ரகுமான் நிமால்)
ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு
பிறப்பு 01.01.1983
வீரச்சாவு 19.10.2000

**57. வீரவேங்கை ரவிஸ்**
இராமநாதபுரம், கிளிநொச்சி.
வீரச்சாவு 08.08.2006

**58. வீரவேங்கை கணேசன்**
(அப்துல்ஜபார் கணேசன்)
யாழ்ப்பாணம்
வீரச்சாவு 19.03.2007

**59. லெப் கேணல் முல்லைமகள்**
(முகைதீன் ஜெரீனா)
50 வீட்டுத்திட்டம், கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.
வீரச்சாவு 19.06.2007

**60. லெப் கேணல் மாறன் அல்லது குன்றத்தேவன்**
(காதர்முகைதீன் நஜீம்கான்)
முல்லைத்தீவு
வீரச்சாவு 29.09.2008

(இவர் லெப். ஈழநாதன் அல்லது ஈழமாறன் அவர்களின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது)

**61. லெப். கேணல் அப்துல்லா**
(முகைதீன்)
காத்தான்குடி, மட்டக்களப்பு.
வீரச்சாவு 02.04.2009

**62. வீரவேங்கை அருள்**
(மேலதிக விரிப்பு கிடைக்கப்பெறவில்லை)

**63. வீரவேங்கை அசீம் அஷாத்**

## சிங்கள மாவீரர்


**லெப்டினன்ட் பழசு**
முதுங்கொடுவ உடுகமகே
ஹேமசிறி
பருத்தித்துறை, யாழ்ப்பாணம்
பிறப்பு 10.10.1963
வீரச்சாவு 13.02.1985

**காமினி**
காமினி பேபியன்
அனஸ்டீன்
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
பிறப்பு 18.07.1968
வீரச்சாவு 04.05.1987

**லெப். கேணல் பவமாறன்**
மார்ட்டின் சில்வா
ஜெயச்சந்திரன்
மட்டக்களப்பு
வீரச்சாவு 15.09.2007


## பறங்கிய இனத்தவர்

**2ஆம் லெப்டினன்ட் வெள்ளை**
பேனாட் எட்வேட்ஸ்ரக்
இருதயபுரம், மட்டக்களப்பு
பிறப்பு 20.02.1964
வீரச்சாவு 23.02.1985



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித விழுமியங்களை ஆன்மீக வழியில் பரப்பும்



# பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா

நா.புவநேந்திரன்
திருகோணமலை

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் நூறாவது ஜெயந்தி தின விழா தற்போது புட்டபர்த்தியில் மட்டுமன்றி உலகெங்கும் உள்ள சுமார் 140 நாடுகளில் பக்திபூர்வமாக, பல வகையான சேவைத்திட்டங்கள் மூலம் ஆன்மீக எழுச்சி விழாவாக பத்தர்களால் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இலங்கையிலும் சாயி அடியார்கள் பல வகையான ஆன்மீக நிகழ்ச்சிகள் மூலம் இவ்விழாவை சிறப்புற நிறைவேற்றி வருகின்றார்கள். விசேட பஜனைகள் ஆன்மீகக் கருத்தரங்குகள், வேதம் ஓதுதல், யாகம் நடாத்துதல் குடிநீர்த்திட்டங்களை வழங்குதல் கண்பார்வைக்கான சத்திரசிகிச்சைகள்செய்தல்,சிரமதானங்கள்செய்தல், சூழலைப்பாதுகாத்தல் இத்துடன் மனித விழுமியங்களை வளர்த்தெடுக்கும் பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகளை என்பவற்றை நடத்துதல் போன்ற பல வகையான ஆன்மீகச் செயற்பாடுகள் மூலமாக இவ்விழாவை பக்திபூர்வமான சேவை மனப்பான்மையுடன் செய்து வருகின்றார்கள்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா தனது ஆன்மீகச் செயற்பாடுகளுடன் சேவை மனப்பான்மையையும் மக்கள் மனதில் விதைத்து தனது சாயி நிலையங்கள் மூலமாகப் பல வகையான சேவைத் திட்டங்களையும் உலகில் உள்ள பல நாடுகளில் நடத்திவந்தார். அத்துடன் தானேநேரடியாக உலகத்தரம் வாய்ந்த மாபெரும் இலவச மருத்துவமனைகளை புட்டபர்த்தியிலும் பெங்களூரிலும் அமைத்து வறுமைக்கோட்டின்கீழ்வாழ்பவர்களுக்கும் உதவிவந்தார். குடிநீர் கிடைக்காத குக்கிராமங்களில் வாழும் ஏழைகளின் நலன்கருதி பல குடிநீர்த் திட்டங்களையும் வழங்கிவந்தார்.

இவைகளுக்கு மேலாக விசேடமாக மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட அன்பான மனித குலத்தை ஆன்மீக அடிப்படையில் வளர்த்தெடுக்க பல வகையிலும் பங்காற்றியுள்ளார். மனித விழுமியங்களை மீண்டும் மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்க இலவசக் கல்வியுடன் கூடிய பல்கலைக்கழகங்களை நிறுவியும்,பல கல்லூரிகளை அமைத்தும் வழிகாட்டியதன் விளைவாக இன்று பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகளை சமுதாயத்துக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகளாக மாற்றியுள்ளார்.

கல்வியின் நிறைவு ஒழுக்கம் என்ற பகவானின் கோட்பாட்டிற்கிணங்க ஒழுக்கமுள்ள மனிதநேயமிக்க சமுதாயத்தை ஆன்மீக அடிப்படையில் கட்டியெழுப்ப பகவான் பாபாவின் சாயி நிலையங்கள் சேவையாற்றுகின்றன. தற்போது சுமார் 27 நாடுகளில் 43 ஸ்ரீ சத்ய சாயி மனித விழுமியப் பாடசாலைகளை நிறுவி மனித விழுமியங்களை அந்தந்த நாட்டுக் கல்வித் திட்டத்துடன் ஒருங்கிணைத்து கற்பிப்பதற்கு இலவசப் பாடசாலைகளை உருவாக்கியுள்ளதுடன். இங்கு கற்கும் மாணவர்கள் மனித நேயத்தை கடைப்பிடிக்கும் ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து சமுதாயத்துக்கு வழிகாட்டவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப்பாடசாலையில் கற்கும் மாணவர்கள் மனித விழுமியங்களான சத்தியம், தர்மம் சாந்தி பிரேமை, அகிம்சை எனும் ஐந்து அடிப்படை விழுமியங்களையும் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் மிகவும் இலகுவான முறையிலான கற்பித்தல் நுட்பங்களினூடாக மனித நேயத்தை மாணவர்களின் அடி மனதில் பதிய வைத்து தமது நாளாந்த வாழ்க்கையில் விழுமியங்களைக் கடைப்பிடிக்கும் திறன் கொண்டவர்களாக வாழ வழி வகுத்துள்ளார்.

மனித விழுமியங்களுக்கே அடிநாதம், தூய அன்பு என்பதையும் இந்த அன்பு தான் மனிதனது உண்மையான இயல்பு என்பதையும் மாணவர்களுக்கு இளமையிலேயே உலகம் முழுவதும் இயங்கும் இந்தப்பாடசாலைகளில் போதிக்கப்படுகின்றன.

பகவான் பாபா தான் எந்த மதத்தையும் புதிதாக உருவாக்க வரவில்லை எனவும் ஏற்கனவே எந்தமதங்களை பின்பற்றுகின்றார்களோ அந்தந்த மதங்களில் அவர்களுக்கு நம்பிக்கையூட்டி அவர் தம் மதங்களை சரியாக கடைப்பிடிக்கத் துண்டுவதே எனது ஆன்மீகச் செய்தியாகும் என்கின்றார்.

ஒரு இந்துவை நல்ல இந்துவாகவும் ஒரு கிறிஸ்தவனை நல்ல கிறிஸ்தவனாகவும் ஒரு இஸ்லாமியனை நல்ல இஸ்லாமியனாகவும் ஒரு பௌத்தரை நல்ல பௌத்தராகவும் மற்றுவதே எனது நோக்கமாகும் என்றார். தூய அன்பே எல்லாமதங்களுக்கும் அடிப்படை என்பதை தெளிவுபடுத்திதனது மதம் அன்பு மதம் தனது மொழி இதயம் பேசும் மொழி தனது குலம் மனித குலம் என்ற சர்வமத சமரசத்தை உலகம் முழுவதும் பரப்பி உலக சமாதானத்தையும் ஒற்றுமையையும் வளர்த்தெடுத்தார்.

இதன் அடிப்படையில் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் ஸ்ரீ சத்ய சாயி மனித விழுமியப் பாடசாலை ஒன்று 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகினறது. சுமார் 200 மாணவர்களைக் கொண்ட இந்தப்பாடசாலையில் சுமார் 22 பயிற்றப்பட்ட திறமையான ஆசிரியர்கள் மனித விழுமியங்களைச் சிறப்பாக வளர்த்தெடுத்து வருகின்றார்கள். இத்தகைய சூழலில் இலங்கையில் பகவான் பாபாவின் ஆன்மீக செயற்பாடுகளை உருவாக்க ஆரம்ப காலங்களில் அயராது உழைத்த இரண்டு சாயி அடியார்களை நினைவு கூர வேண்டியது மிகவும் அவசியமாகும். ஒருவர் ஸ்ரீ.செ. சிவஞானம் ஐயா . இவர் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராகவும் முதலாவது இலங்கைக்கான சத்தியசாயி நிலையங்களுக்கான மத்திய இணைப்பாளராகவும் சேவையாற்றி யுத்த காலத்திலும் அயராது உழைத்து சாயி நிலையங்களை தூய அன்புடன் வழி காட்டியவர். இவரது ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் தூரநோக்குமுள்ள சிந்தனைகளும் இன்றும் பல சாயி நிலையங்கள் பல்வேறு ஆன்மீக சேவைகளை சிறப்பாக செய்வதற்கு அத்திபாரமாக அமைந்துள்ளது.

இன்னுமொரு சாயி அடியார், கொழும்பு சத்ய சாயி பாபா நிலையத்தை பல வருடங்களாக வழி நடத்திய ஸ்ரீ. சி. சிவநாயகம் ஐயா . இவர் வளர்த்தெடுத்த கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா நிலையத்தின் அயரா முயற்சியாலும் இடைவிடாத ஊக்கத்தாலும் பகவான் பாபாவின் நூறாவது ஜெயந்தி தினத்தை கொண்டாடும் முகமாக இலங்கை அரசாங்கம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் தபால் நினைவு முத்திரையை வெளியிடத் தீர்மானித்துள்ளது. இன்று நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்படுகின்ற இந்தத் தபால் முத்திரை மூலம் பகவான் பாபாவின் சேவைகளை மதித்து அங்கீகரித்துள்ளமையினை இலங்கை அரசாங்கம் பெருமையுடன் பறைசாற்றி நிற்கின்றது. ■



# மலருமோ கார்த்திகை?

பொனிஸ்ரெலா சந்தியாசன்

தமிழர் தாயகத்தில் கார்த்திகை மாதம் வரும்போது, தீபங்கள் மட்டுமல்ல, நிலத்தில் மலரும் ஒரு மலர்கூட மாவீரர்களை நினைவேந்துகின்றது – அதுவே கார்த்திகைப் பூ அல்லது காந்தள் மலர். இதன் பிரகாசமான சிவப்பு நிறம் காரணமாக, தமிழரின் வரலாற்றில் இது ஒரு ஆழமான அடையாளமாக வேர் கொண்டுள்ளது. தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களின் வலிகளையும், நீதிக்கான ஏக்கத்தையும் தாங்கி நிற்கும் ஒரு குறியீடாகவும் கார்த்திகைப் பூ மாறி நிற்கிறது. இந்த மலர் ஒரு துயரத்தின் சாட்சியாகவும், அதே வேளையில், மீள் எழுச்சிக்கான உறுதியின் வடிவமாகவும் தமிழர் மனங்களில் உருக்கொண்டுள்ளது.

கார்த்திகைப் பூவின் இதழ்கள் தீச்சுடர் போலவும், விடுதலைக்காகச் சிந்திய இரத்தத்தின் நிறம் போலவும் காட்சியளிக்கின்றன. இது, ஈழ மண்ணில் உரிமைக்காகவும் விடுதலைக்காக வும் போராடி உயிர் நீத்த மாவீரர்களின் தியாகத்தையும், அவர்கள் சிந்திய இரத்தத்தையும் குறியீடாக உணர்த்துகிறது. தமிழர் வரலாற்றில் ஏற்பட்ட பெரும் கொடூரங்களுக்குப் பிறகும், தமிழினம் இன்றும் முழுமையான நீதியைப் பெறவில்லை. இந்த மலர் ஒவ்வொரு ஆண்டும் மலரும்போது, நீதி மறுக்கப்பட்ட அந்த துயரச் சம்பவங்களை நினைவூட்டி, எம்மிடையே ஆழமான ஒரு உணர்ச்சிப் பிணைப்பை ஏற்படுத்துகிறது. இந்த மலர்ச்சி, துயரத்தை மட்டும் அல்லாமல், மீண்டும் எழுந்து நிற்க வேண்டும் என்ற அழியாத உறுதியையும் குறிக்கிறது.

வரலாற்றின் நீண்ட பக்கங்களில், தமிழ் இனம் ஈழத்தில் ஈடு செய்ய முடியாத இழப்புகளையும், வேதனைகளையும் சந்தித்துள்ளது. கண்ணீரும், இரத்தமும் சிந்திய இன அழிப்புகளிலும், போர்களின் விளைவாகவும், தமிழர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை, உரிமைகளை, உறவுகளை இழந்தனர். இந்தத் துயரச் சுவடுகளின் நடுவே, தமிழ் மக்கள் தங்கள் கலாசாரத்தையும், அடையாளத்தையும் இன்னும் கண்ணுக்குள் இமையாகப் பேணிக் கொண்டு வாழ்கின்றனர். ஆயினும், நீதியின் கதவுகள் எமக்கு இன்னும் திறக்கப்படவில்லை என்பதே கசப்பான உண்மை. நடந்த அநீதிகளுக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படாமலும், பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடோ, அங்கீகாரமோ பெறாமலும் இருக்கும் ஒரு யதார்த்தமே நீடித்துக் கொண்டிருக்கிறது.

தமிழர்களுக்கு எப்போது நிரந்தரமான சமூக நீதி கிடைக்குமோ, அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு காணப்படுமோ, அப்போதே உண்மையான கார்த்திகை மலரும். பொறுப்புக்கூறலும், நீதியும், இழந்த நிலங்களை மீட்டுத் தருவதும், அகதிகளின் மறுவாழ்வை உறுதிசெய்வதும் நீதிக்கான முதல் படிகள். நீதி நிலைநாட்டப்படும் அந்த நாளே, பயத்தின் நிழல் நீங்கி, அனைவரும் சமமாக வாழும் சுதந்திர நாள். அதுவே, காலத்தால் அழியாத, தமிழ் இனத்துக்கான நீதியான ஒளியைப் பாய்ச்சும் நிஜமான கார்த்திகையின் மலர்வாக அமையும். தமிழர்களுக்கு எப்போது நிரந்தரமான சமூக நீதி கிடைக்குமோ, அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு காணப்படுமோ, அப்போதே உண்மையான கார்த்திகையும் மலரும். மாவீரர் கனவும் நனவாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org